# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

May 2024 மே 2024



Retail Selling Price 25
Page 1
Volume - 16, Issue - 03

## அட்டைப்பட விளக்கம்



திருமுல்லைவாசல்
தர்ஹா ஷரீபின்
திருத்தோற்றம்

(முன்வளாகம்
கட்டுவதற்கு முன்)

தர்ஹா ஷரீபுக்கு முன்
நின்று காட்சிதரும்
கண்ணியவான்கள்

1. மர்ஹூம். மௌலவி. ஹெச். பஜ்லுல்லாஹ் மரைக்காயர் அவர்கள்,

2. மர்ஹூம். சங்கைமிகு ஏ. மஸ்ஊத் மௌலானா அல்ஹாஜ் அவர்கள்,

3. அல்ஹாஜ். ஹபீபுல்லாஹ் மரைக்காயர் அவர்கள்.

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை

பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.

திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா

அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா

நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி

ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,

52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165


செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி


**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**

**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**

13. எம்.ஆர்.ஆர். நகர்

திண்டுக்கல் - 624 002.

CELL : 99445 76165

Website:www.emsabai.org

email: aalimpulavar07@ gmail.com

email: j.mdrahmathulla@yahoo.com

https:www.emsmedia.net

https:www.awniyyabookstore.com

https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


ரமளான் - ஷவ்வால்

**மே 2024**

**Volume - 16 Issue -3**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்

திருமறைப் பக்கம்.

அமுத மொழிகள்.

உமர் (ரலி) புராணம் – நயம்.

அறபு இலக்கிய வளர்ச்சி

புனித தர்ஹா கட்டடக் கமிட்டியின் முதல் இணையவழிக் கூட்டம்

ஆச்சர்யம்... ஆனால்...உண்மை.

ஒன்று இரண்டுபோல் இயங்குக....!

சற்குரு சரித்திரம்

சங்கைமிகு வாப்பாநாயகம் அவர்கள் 89 ஆம் உதயதின செய்திகள்

தொடரும் முஹம்மதிய்யத் தலைமைகள்

ஷைகு படே ஸாஹிப் ஹள்ரத் (ரஹ்)

40 ஆம் நாள் விழா – பட்டமளிப்பு விழா

தொடர்.....

# 60 ஆம் ஆண்டு அருள் விழா!

தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் நிறுவனராகிய பேரறிஞர், பெரும் ஞானி, நபிமொழி வல்லுனர், புகாரீ ஷரீப் விரிவுரையாளர், பன்மொழிப் புலவர், நபிகுலத் தோன்றல், முஹிய்யுத்தீன் ஆண்டகையின் திருப்பேரர், குத்புல் ஃபரீத், கௌதுல் வஹீத், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் 60 ஆம் ஆண்டு உரூஸ்– கந்தூரிப் பெருவிழா துல்கஃதா பிறை 17 அன்று மலர்கிறது.

நமது உயிரினும் மேலான வாப்பா நாயகம் அவர்களின் திருமேனி மறைவுக்குப்பின் நிகழும் முதல் கந்தூரி விழா.

சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் அருள்வழி காட்டலில் நமது தரீகாவின் ஷைகாகப் பொறுப்பேற்ற அஸ்ஸெயித் யாஸீன் அலி மௌலானா அல்ஹாஷிமிய் அவர்கள் தலைமை தாங்கி நடத்தப் போகும் முதல் கந்தூரி விழா.

ஹள்ரத் பாத்திமா (ரலி) அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களி லிருந்து வழிவழியாக வந்த வலிமார்கள் தொடர், யாஸீன் அலி நாயகர் வழியாகத் தொடரப்போகிறது. அல்ஹம்து லில்லாஹ்.

ஒலிம்பிக் தொடர் ஜோதியை விளையாட்டு வீரர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தொடர்ந்து கொண்டுவருவார்கள்.

அதேபோலத்தான் இந்த நூரே முஹம்மதிய்யா எனும் ஒளிச்சுடர் பாரம்பரியமாகச் சுமந்து வரப்பட்டு இன்று யாஸீன் அலி நாயகரிம் ஒப்படைக்கப் படுகிறது.

யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள் தங்களின் திருமகனார் ஜமாலிய்யா அஸ்ஸெயித் கலீல் அவ்ன் மௌலானா கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் தோள் சுமந்து, மடிசுமந்து, கல்வி, ஞானமூட்டி பொறுப்பாக வளர்த்த திருப்பேரரைக் கண்டு உளம் பூரித்து மகிழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

தாங்கள் நடமாடிய, தங்களின் திருமகனார் நடமாடிய திருமுல்லைவாசல் நகரம் இன்று தங்கள் பேரரின் திருப்பாதங்கள் நடமாட நடமாட மேலும் புனிதம் பெறட்டும் எனப் பூரித்துப் போவார்கள்.

ஞானக் களஞ்சியமாக, கராமாத்துக் கருவூலமாக, தாங்கள் திருமுல்லையில் வீற்றிருக்க, இன்னும் இந்த ஊர் மக்கள் தங்களிடமுள்ள செல்வங்களை முழுதும் அள்ளிக் கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் அவர்களுக்கிருக்கலாம்.

யாஸீன் அலி நாயகரின் ராஜியத்தில் அது மாற்றம் பெறட்டும்!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

## அஷ்ஷைகுல் காமில்
## குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்
## ஜமாலிய்யா
## அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



நபிமார்களிற் பல திறப்பட்டவர்கள் இருந்தமை போன்று ஞான குருமார்களிலும் பலதிறப்பட்டவர்கள் உள்ளார்கள். குதுபுமார்கள், வலீமார்கள் எனப்படுவோரும் இவர்களல்லாத செய்குமார்களும் தீட்சையெனும் முரீது கொடுத்து வருகிறார்கள். குதுபுமார்களிலும் வலீமார்களிலும் செய்குமார்களிலும் பல வகைப்பட்டோர் உள்ளனர். தரத்துக்கேற்ப அவர்கள் செய்யும் பைஅத்திலும் ஏற்றத்தாழ்வு உண்டு. எவர் எப்படியாயினும் ஞானம் எனும் "வஹ்தத்துல் வுஜூதை" யார் நன்கறிந்தாரோ அவர் செய்யும் பைஅத்தே மிகத் திருப்திகரமானதாகும்.

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

♦ நாம் உடலென்னும் இதனைப் பெற்றிருக்கின்றோம். எனினும் எம் ஹகீகத்து ஆத்துமார்த்தமேயாகும். சிறகுடைய பட்சிகள் பறப்பனபோல் எம் ரூஹே குத்ஸ் நினைத்த ஆலங்கள் அனைத்திலும் அலைகின்றது. இந்நேரத்தில் எமக்கு முன்னோர் பின்னோர் என்றோ, சென்ற, நிகழும், வரும் காலங்களென்றோ முதிர்வு இளமையென்றோ வித்தியாசங்களில்லை. ஏனெனில் நாமோ நினைத்த நேரம் நம்முடைய முன்னையதும் அஸ்லிய்யத்துமான மர்த்தபதுல் அமா என்ற லாத அய்யுனிலிருப்பதுவே காரணமாகும்.

♦ செய்க் என்பவர் (நேர்வழி காட்டுகிறவராவார்)

♦ (குத்பியத்துடைய) செய்கே அல்லாஹ்வின் மள்ஹறராவார்.

வேறொருவருமல்லாத தான் பின்பற்றும் செய்களவிலேதான் கல்பை நேமமாய்க் கட்டுப்படுத்தல் வேண்டும். தன்னில் அஸ்ரார்கள் ளுஹூராகவும் (வெளியாகவும்) ஹக்கின் மள்ஹறரான செய்கை இவர்தான் எமக்குக் குறிப்பாக்கப்பட்டவர் என உறுதியாக எண்ணிக் கொள்ள வேண்டும். உலகத்திலே பல செய்க்மார்களும் பல வலீமார்களும் பல குத்புமார்களும் இருந்தாலும் தரத்தில் உயர்ந்தவர் குத்புல் அக்தாபேயாவார். முன்னே இதில் இது பற்றி எழுதியிருக்கிறேன்.

*ஸாஹிபுல் வக்த், ஷம்ஸுல் வுஜூத், ஹக்குல் முபீன், குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யில் ஹாஷிமிய்யி வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ், அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய பட்டோலையிலிருந்து.*

மனிதனே!

ஒருவன் ஒரு சிறு குற்றமோ ஒரு பெருங்குற்றமோ செய்ததற்காக எரிந்து விழாதே. கடிந்து பேசாதே. பாய்ந்து விழாதே. அவனுக்கு உன்னுடைய போதனையை அல்லது அறிவுறுத்தலை அமைதியாகவும் அவனது மனதிற் படும் வண்ணமும் மெல்லக்கூறு. அவன் வெட்கப்படும் வண்ணமும் மெல்லக் கூறு. அவன் வெட்கப்படுவானாயின் மற்றவர்கள் மத்தியில் உன் பாய்தல், எரிதல், கடிதல் அனைத்தையும் வண்டி வண்டியாகக் கொட்டிவிடாதே. உன்னை அவன் மனிதனாக நினைக்க மாட்டான். பாய்ந்து விழாதே. கடிந்து பேசாதே. பாய்ந்து சீறி விழுவது கொடிய கரடி, புலிகளின் தன்மை.

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*



## கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

أَفَتَطْمَعُونَ أَن يُؤْمِنُوا لَكُمْ وَقَدْ كَانَ فَرِيقٌ مِّنْهُمْ يَسْمَعُونَ كَلَامَ اللَّهِ
ثُمَّ يُحَرِّفُونَهُ مِن بَعْدِ مَا عَقَلُوهُ وَهُمْ يَعْلَمُونَ ۝ ٧٥

நிச்சயமாகவே, அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹுதஆலாவின் திருவசனத்தைக் கேட்டும் அதைச் சிந்தித்தறிந்த பின்னரும் அத்திருவசனத்தை மாற்றிவிடுகின்றனர். (இவ்வாறிருக்க) உங்களை அவர்கள் நம்புவார்கள் எனும் பேராசையில் நீங்கள் உள்ளீர்களா?

وَإِذَا لَقُوا الَّذِينَ آمَنُوا قَالُوا آمَنَّا

(நயவஞ்சக மூடர்களான) அவர்கள் நம்பிக்கையாளர்களைச் சந்தித்தபோது நாமும் நம்பிக்கை கொண்டோம் என்று கூறினார்கள்.

وَإِذَا خَلَا بَعْضُهُمْ إِلَىٰ بَعْضٍ

மேலும், அவர்களிற் சிலர் சிலரிடத்துத் தனித்த போது,

قَالُوا أَتُحَدِّثُونَهُم بِمَا فَتَحَ اللَّهُ عَلَيْكُمْ

அல்லாஹுதஆலா உங்களுக்குத் திறந்து (வெளிப்படுத்தித்) தந்ததை நீங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறீர்களா?

لِيُحَاجُّوكُم بِهِ عِندَ رَبِّكُمْ

நீங்கள் இறைவன் முன்னே, அதுபற்றி உங்களிடத்து, அவர்கள் எதிர்வாதம் செய்வதற்காகவா (அதனைச் செய்தீர்கள்?)

أَفَلَا تَعْقِلُونَ ۝ ٧٦

நீங்கள் சிந்திக்க வேண்டாமா? என்று கேட்டார்கள்.

أَوَلَا يَعْلَمُونَ أَنَّ اللَّهَ يَعْلَمُ مَا يُسِرُّونَ وَمَا يُعْلِنُونَ ۝ ٧٧

அவர்கள் மறைத்துள்ளவைகளையும் அவர்கள் வெளிப்படுத்துகிறவை களையும் அல்லாஹ் மிக அறிவான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்களா?

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتٰبَ إِلَّآ أَمَانِيَّ

1. அவர்களிற் பாமரர்களும் உளர். பொய்யான எண்ணக் கதைகளையே யன்றி, அவர்கள், வேதத்தை அறியமாட்டார்கள்.

2. அவர்கள் வதந்திகளைக் கேட்பவர்களே யன்றி எழுதவும் அறியமாட்டார்கள்.

وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ ۝ ٧٨

அவர்கள் வீணாக எண்ணுகிறவர்களே யன்றி வேறின்று.

---

(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)

75. (நம்பிக்கையாளர்களே!) உங்(கள் வார்த்தை)களுக்காக இவர்கள் நம்பிக்கை கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றீர்களா? அல்லாஹ்வின் வசனத்தைக் கேட்டு அதை நன்கு புரிந்த பின்னரும், (அதன் சரியான பொருளை) அறிந்து கொண்டே அதை மாற்றிவிடும் ஒரு பிரிவினரும் அவர்களில் இருந்தனர்.

76. மேலும், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களைச் சந்தித்தால் (தவ்றாத்தில் உங்கள் நபியைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆதலால்) நாங்களும் ( அவரை) நம்பிக்கை கொள்கிறோம் எனக் கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் தனித்த பொழுது ஒருவர் மற்றவரை நோக்கி (உங்கள் வேதத்தில்) அல்லாஹ் உங்களுக்குத் தெரிவித்திருப்பதை அவர்களுக்கு நீங்கள் அறிவிக்கிறீர்களா? உங்கள் இறைவன் முன்பாக அதைக்கொண்டு அவர்கள் தர்க்கிப்பதற்காகவா? (அவர்களுக்குச்

சொல்லிக் கொடுக்கிறீர்கள்) இவ்வளவு கூட நீங்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? என்று கூறுகின்றனர்.

77. அவர்கள் மறைப்பதையும் பகிரங்கப்படுத்துவதையும் நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான் என்பதை அவர்கள் அறியவேண்டாமா?

78. மேலும், கல்வி அறிவு இல்லாதவர்களும் அவர்களில் உண்டு. வேதத்தைப்பற்றி (கேள்விப்பட்டுள்ள) வீண் நம்பிக்கைகளைத் தவிர (உண்மையை) அவர்கள் அறியவே மாட்டார்கள். அவர்கள் வீண் சந்தேகத்தில் (ஆழ்ந்து) கிடப்பவர்களைத் தவிர (வேறு) இல்லை.

---


**வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?**

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**


---

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் ஆஷிக்கும், திருவாவடுதுறை மதினா தெரு ஹாஜி. ஷம்ஸூத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மகனாரும், ஷேக்தாவூது ஹக்கிய்யுல் காதிரிய், அபுதாபி ஜுபைர் ஹக்கிய்யுல் காதிரிய், மற்றும் டாக்டர். அம்ஜத் எம்.பி.பி.எஸ். இவர்களின் சகோதரரான டாக்டர் நூருல்ஹக் எம்.பி.பி.எஸ்.எம்.டி. அவர்கள் சென்ற 16.04.2024 இரவு வஃபாத்தானார்கள். 18.04.2024 வியாழன் காலை 9.30 மணிக்கு திருவாவடுதுறை மையவாடியில் நல்லடக்கம் நடைபெற்றது.

அல்லாஹ் அன்னாரது பிழைகள் பொறுத்து சுவனப் பேறினை அருள்வானாக. அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு ஸப்ரன் ஜமீலா எனும்பொறுமையைத் தந்தருள்வானாக! ஆமீன்!

## திருக்குறள்

**கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு . (819)**

தம் செயல்கள் வேறாகவும் தம் பேச்சுகள் வேறாகவும் நடப்பவரின் தொடர்பானது, நனவில் மட்டுமே அல்லாமல் கனவிலும் கூடத் துன்பமானதாகும் .

---

**உணர உணரும் உணர்வுடை யாரைப்**
**புணரப் புணருமாம் இன்பம் - புணரின்**
**தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்**
**பிரியப் பிரியுமாம் நோய். (247)**

எதையும் விளங்க ஆராய்ந்துணரும் அறிவுடையாரைச் சேரின் இன்பமும் சேரும். விளங்க உணரும் உணர்ச்சி யில்லாரோடு தவறிச் சேர்ந்து பழகின், அவரை விட்டு நீங்கும்போது துன்பமும் விட்டு நீங்கும். *(நாலடியார்)*

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

رمضان

**ரமளான்**

1 புனித நோன்பு மாதம் தொடக்கம்
3 சுவனப் பெண்கள் நாயகி ஃபாத்திமா (ரலி)
10 உம்முல் முஃமினீன் கதீஜா நாயகி (ரலி) மறைவு
14 பாயஜீது பிஸ்தாமீ (ரஹ்) மறைவு
15 திருச்சி நத்ஹர் ஷாஹ் வலிய் (ரஹ்) கந்தூரி
இமாம் ஹஸன் (ரலி) உதயம்
17 புனித பத்ரு சஹாபாக்கள் நினைவு
உம்முல் முஃமினீன் ஆயிஷா (ரலி) மறைவு
20 மக்கா வெற்றி
21 அலீ (ரலி) ஷஹீது
22 இமாம் இப்னு மாஜா (ரஹ்) மறைவு
27 புனித லைலத்துல் கத்ர்

---

**ஷவ்வால்**

شوّال

1 ஈதுப் பெருநாள்
3 புகாரி தங்கள் கந்தூரி
16. **சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது கலீல் அவ்ன் மௌலனா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் உதயம்.**
25. ஹைதராபாத் அப்துல் காதிர் ஸூஃபி ஹள்ரத் உரூஸ்

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



*சென்ற இதழ் தொடர்ச்சி....*

**இங்கே குருடர் அங்கேயும் குருடரே!**

யார் இங்கே குருடர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அங்கேயும் குருடர்கள்தான். எந்தக் குருடு? கண்குருடு அல்ல. கல்பு குருடு ஆகிப்போவது. இங்கே யார் கல்பு குருடாகிப் போய் இருக்கிறார்களோ அவர்கள் அங்கேயும் குருடாகத் தான் இருப்பார்கள் என்றால் கருத்து, இங்கே ஏமாந்தது போல் அங்கேயும் ஏமாந்து தான் போவார்கள். ஏமாறாமல் இருப்பதற்காக வேண்டித் தான் நாங்கள் இந்த உண்மையான நல்ல விஷயங்களை நாங்கள் அறியவேண்டும்.

ஷரீஅத்தில் நாங்கள் அறியக்கூடிய சில விஷயங்களை விட, தவ்ஹீத் சம்மந்தப்பட்ட விஷயங்கள் தான் நுணுக்கங்கள் பல பல விளக்கங்களை நாங்கள் அறிவோம். உண்மையாக அறிவோம். தத்துவார்த்தங்களை அறிவோம். ஷரீஅத்தில் அப்படி அறியவில்லையே. தவ்ஹீத்..... அல்லாஹ் தவ்ஹீதைத்தான் கேட்பான். நீ அவரை கவனித்து இருந்தால் என்னை கவனித்திருப்பாய். நீ அவனை கவனிக்கவில்லை என்றால் என்னை கவனிக்கவில்லை. இதுதான் தவ்ஹீது. இங்கே மறைந்திருப்பது தவ்ஹீதின் கருத்து. நபியே! எதிரிகள் மீது நீங்கள் மண்ணை வீசியது நீங்களே வீசவில்லை.... நான் தான் வீசினேன். அவனை நீங்கள் பார்த்திருந்தால், என்னைத் தான் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அதனால் எவ்வளவுதான் கித்தாபுகளைப் புரட்டி புரட்டி ஓதினாலும், எவ்வளவு பெரிய கித்தாபுகளைப் புரட்டி புரட்டி நாங்கள் ஓதினாலும், அதற்குரிய அர்த்தம் என்ன என்பதை சரியாக விளங்கிக் கொண்டால் தான் நல்ல விஷயம். அப்படியானால் அதை விளங்காமல் எவ்வளவு ஓதியும் புண்ணியம் இருக்கிறதா? எத்தனை கிதாபுகளைப் புரட்டியும் புண்ணியம் இருக்கிறதா? அப்போது அல்லாஹ் கேட்பது

தத்துவார்த்தமாக வாழ்ந்தானா? உண்மையாக வாழ்ந்தானா? நீதத்தோடு வாழ்ந்தானா? நியாயத்தோடு வாழ்ந்தானா? என்னுடைய மக்களுக்கு அவன் உதவி செய்து வாழ்ந்தானா? இவை தான் முதலாவது கேள்வி. அப்படியானால் இந்தக் கேள்விகளுக்கு நாங்கள் உதாரணமாக இருக்க வேண்டும். முதன்மையாக இருக்க வேண்டும். அதை இங்கிருந்து நாங்கள் பழக வேண்டும். பழகிவிட்டுப் போனால்தான் அங்கே நலம். நீ இப்படி இருந்தாய் அப்படி இருந்தாய் என்றால் கருத்து இருக்காது.

பள்ளியைப் காப்பாற்றுவது பேமென்ட்டில் (பிளாட்பாரத்தில்) இருக்கக்கூடிய சண்டியர்கள் தான் பள்ளியை பாதுகாத்தார்கள். தலப்பா கிலப்பா எல்லாம் கட்டி ஜுப்பா.. எல்லாம் போட்டு பெரிய.. மணக்க மணக்க... தலையைக் குத்தி குத்தி கஷ்டப்பட்டவர்கள் அவ்வளவு பேரும், எதிரிகள் அடிக்க வருகிறார்கள் என்ற உடன் ஒரே ஓட்டம் தான். இது எங்கே? ஆஹிரா உடைய செயலில் வருமா இது? இதைத்தான் சொல்வது ஆகிராவுடைய (அமா) குருடன். ஈமான் இல்லையே... பயந்து கொள்கிறானே? எங்கே ஈமான் இருக்கிறது? மனதில் சக்தி இருக்க வேண்டும் அல்லவா? கோழையாக இருக்கக் கூடாது. கோழையாக இருப்பவன் முஸ்லிம் அல்ல. கோழையாக இருந்தால் முஸ்லிமாக இயலுமா? கோழையாக ஓடி வந்ததனால் என்ன நடந்தது? பள்ளியை உடைத்துப் போட்டு விட்டான். அதற்கு பாதுகாக்க உதவிக்கு வந்தது யாரு? பேமென்ட் ஆட்கள்.

அவர்கள் சொர்க்கத்திற்கு செல்வார்கள். இவர்கள் நரகத்திற்குப் போவார்கள். நரகத்துக்குப் போவார்களோ? எங்கேயாவது தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருப்பார்களோ தெரியாது. கைலியைக் கட்டி தூக்கிக்கொண்டு... அவங்க இந்த மாதிரி தானே போவார்கள். சண்டியர்கள் எல்லோரும் போவார்கள். எங்கே போவார்கள்? சொர்க்கத்திற்குப் போவார்கள். சண்டியர்களாகவும், வீரர்களாகவும் அவர்கள் சொர்க்கத்திற்குள் புகுவார்கள். இவர்கள் என்ன செய்வார்கள்? தலைப்பாகை ஜிப்பாவை அது இது எல்லாம் போட்டுக்கொண்டு போய் புகுவது எங்கே? வேறு இடத்திலே. ஈமான் என்பது இதுதான். ஒளிந்து ஓடுவது ஈமான் அல்ல.

### நெஞ்சிலா? முதுகிலா?

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய யுத்தம் நடந்த காலத்தில் ஒரு பெண்ணிடம் போய்ச் சொன்னார்களாம். உன்னுடைய கணவனும் உன்னுடைய மகனும் இறந்து விட்டார்கள் என. உடனே அந்தப் பெண்மணி

கேட்டார்களாம்... எந்தப் பக்கம் அடிபட்டது? முன்பக்கமா பின்பக்கமா? அப்பொழுது சொன்னார்களாம். முன்னுக்குத் தான் அடிபட்டுவிட்டது. வீரனாக மௌத் ஆகி இருக்கிறார். அதுவே போதுமே.... வேறு என்ன வேண்டும். பின்பக்கம் அடி என்று இருந்தால் ஓடி இருப்பார் அடித்து இருப்பார்கள். பாருங்கள் இஸ்லாம் எவ்வளவு வீரம்! பெண்கள் கேட்கிறார்கள் இந்த கேள்வி. யார்? ஆண்கள் கேட்கிற கேள்வி அல்ல. இதை கேட்பது பெண்! அது வீர மரணம். எவ்வளவு பெரிது! அல்லாஹ் நன்மையைக் கொடுப்பான்.

மேன்மேலும் அல்லாஹுதஆலா எங்கள் பிள்ளைகளுக்கு ஒழுங்கான வாழ்வையும், நேர்மையான வாழ்வையும் நல்ல சக்தி வாய்ந்த உடலையும் நல்ல ஈமானையும் பெருமானாரின் சிறப்பையும் நல்ல நீடிய ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் நல்ல வாழ்வையும் மேன்மையும் சிறப்பையும் கொடுத்து சந்தோசமாக வாழ்வதற்கு அல்லாஹ் அருள் பாலிப்பானாக. ஆமீன்.

*(ஒளிவடிவத்திலிருந்து உரை வடிவம் தந்தவர்: மௌலவி. பீர்முஹம்மது யாஸீனிய். ராமநாதபுரம்.)*

---

**சங்கைக்குரிய குதுபுஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் இமாம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் கத்தஸல்லாஹு ஸிர்ரஹில் அழீம் அவர்களின் கலீஃபா, இலங்கை வலிய்யுல் அமான், நஜ்முல் உலமா, அல்ஹாஜ், மௌலவி ஏ.எல் முஹாஜிரீன் ஹக்கிய்யுல் காதிரி (நத்வி) அவர்களின் 40 ஆம் நாள் உரூஸ் இலங்கை யாஸீன் மௌலானா மன்ஜிலில் சிறப்பாக நடந்து முடிந்தது.**

---

√ உண்மையான வாசகன் வாசிப்பதை முடிப்பதே இல்லை. *–ஆஸ்கார் ஒயில்ட்–*

√ புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே! –லெனின்–

√ **மன்சூர் இப்னு அம்மார் (ரலி) கூறுகிறார்கள்:**

நஃப்ஸினுடைய அமைதியும சீர்திருத்தமும் அதற்கு மாறு செய்வதில் தான் இருக்கின்றது.. அந்த நஃப்ஸினுடய சோதனை என்பது அதற்குக் கீழ்ப்படிவதிலும் அதைப் பின்பற்றுவதிலும் தான் இருக்கின்றது...

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**விண்மஞ்சு மஞ்சியே மேற்சுரஞ் செல்லாது**
**புண்ணாமோ மெய்யென்றும் போக்காடும் - நண்ணுமோ**
**வென்றுன்னித் தண்ணீர் விசிற்றாது சென்றிடுமே**
**நின்றே சொரியாது நீர்.**

**பொருள் :**

உடற் புண்ணாகி விடுமோ என்றும் சாவும் வந்து கிட்டுமோ என்றும் நினைத்து விண்ணிலே உலவுகின்ற நீர் மேகமும் பயப்பட்டு பாலைவனத்தின் மேற் செல்லாது. குளிர் நீரையும் சொரியாது. வேறிடஞ் சென்றுவிடும். சுரத்தின் மேல் நின்று நீரைப் பொழியாது.

மழை மேகம் மக்களுக்கு தண்ணீர் எனும் அருட்கொடையைத் தருவதற்காக –சொறிவதற்காக – தாய் மனதுடன் வானில் தன் ஊர்வலத்தைத் தொடங்குகிறது. அது வரும் வழியில் வெப்பம் கொதிக்கும் பாலை வனத்தை எட்டிப் பார்க்கிறது. உடனே பாலை வனத்திற்கு மேலே போனால் அதன் வெப்பத்தால், தன் மேனி சுடப்பட்டு வெந்து புண்ணாகி விடுமோ என்றும், அந்தக் காரணத்தால், சாவும் வந்து சேருமோ எனவும் அஞ்சுகிறது. அதனால் பாலை வனத்துக்குள் கால்வைக்க அஞ்சி வேறு வழியே திரும்பிப் போய்விடுகிறது. அதனால் தான் கருக்கொண்டு சுமந்து வந்த நீரைச் சொரியாததாலும் பாலை மீது மழையைப் பொழியாததாலும் பாலை மேலும் மேலும் சூடாகி அனலைக் கக்குகிறது.

தமிழ் இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,பாலை எனும் ஐவகை நிலங்களுக்கும் ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உறைவிடமாகக் கூறுவர். அந்த வகையில் பாலை நிலத்துக்குரிய தெய்வமாக கொற்றவை எனப்படும் காளியையும் அவளது படைகளாக பேய்களையும் காட்டுவது தமிழ் மரபு. அந்த வகையில் சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் இப்படிப் பாடுவார்.

மூவிலை நடுவேல் காளி வீற்றிருப்ப
முறை முறை நெட்டுடல் கரும்பேய்
ஏவல் செய் துஉறைவது அலதுமா னிடர் கால்
இடுவதற்கு அரிது...

(சீறாப் புராணம் சுரத்தில் புனல் அழைத்த படலம் 8- 687)

அதாவது, காளி தேவி, திரிசூலம் எனப்படும் நடுவில் வேல் வைத்து இரண்டு இலைகளுடன் காட்சிதரும் கூரிய ஆயுதத்தைத் தாங்கி பாலையில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்க, காளியின் உத்தரவுகளை உடனுக்குடன் செய்து முடிக்கக் காத்திருக்கும் கரிய பேய்கள் அங்கு குடியிருக்குமேயல்லாது மனிதர்கள் காலெடுத்துவைத்து அங்கு செல்வது அரிது.

சீறாப்புராணத்தில் இப்பாடல் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாலை வனத்தில் நீரூற்று பொங்கி வரச்செய்த நிகழ்ச்சியைக் கூறும் "சுரத்தில் புனல் அழைத்த படலத்"தில் வருகிறது.

(சுரம்: பாலைவனம். புனல்: தண்ணீர், நீர் ஊற்று)

மேலும் உமறுப் புலவர் பாலையின் கொடுமைபற்றி இவ்வாறு பாடுவார்.

பருந்திருந் தெழுந்து பறந்த சின்னிழலும்....

அதாவது, பாலைவனத்தில் கள்ளிச் செடிகளும், முட்செடிகளும் பரந்து காணப்படும். நிழல் தராத குறுகிய உயரமே கொண்ட அவற்றால் நிழல் கிடைக்காது. யாரேனும் வெயிலின் கொடுமையிலிருந்து தப்பிக்க நிழலைத் தேடினால் எங்கும் நிழல் இராது.

நிழல் இல்லாத அந்த பூமியிலும் நிழல் இருக்குமாம்.... என்ன நிழல்?

பருந்திருந் தெழுந்து பறந்த சின்னிழல்...

வேறு பறவைகள் புகாத அங்கு பருந்து மட்டுமே பறந்து காட்சிதரும்.

அப்படி பருந்து அங்கு வந்து அமர்ந்து, பறக்கும் போது ஏற்படும் கொஞ்ச நிழல் வேண்டுமானால் அங்கு கிடைக்குமாம்.

அதைத்தான் "பருந்திருந்தெழுந்து பறந்த சின்னிழல்" - அதாவது கொஞ்ச நிழல் என நயமாகப் பாடுவார்.

பாலை நிலத்தின் காட்சியைக் கண்முன்னே கொண்டுவந்த சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மேலே வரும் பாடலை மீண்டும் ஒரு முறை படித்து ரசியுங்கள்.

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## அஞ்ஞான கால இலக்கியத்தில் சில முன் மாதிரிகள்

கஸ்ஸுப்னு (قَسّ) ஸாஇதா (ساعدة)வெனும் பாதிரியார் நபிகள் பெருமானாருக்கு முன் கி.பி ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்து இறந்தார். அவர் யமன் தேசத்திலே நஜ்ரான் பகுதியில் வசித்தார். அல்லாஹு வைக் கொண்டு விசுவாசங் கொண்டவராயும் மனிதர்களை அறிவு, நல்லுபதேசம் முதலியன கொண்டு நல்வழியில் அழைக்கிறவராயும் இருந்தார்.

முதன் முதலாக உயர்ந்த இடத்திலிருந்து உபதேசம் செய்தவரும், வாளை ஊன்றி உபந்நியாசம் நிகழ்த்தியவரும் முதன்முதலில் "அம்மாபஉது" (امَّابعد) அதன் பிறகு எனும் சொல்லை உச்சரித்த வரும் அவரேயாவர்.

அவர் உக்காள் (عكاظ) என்ற சந்தையிற் செய்த பிரசங்கங்களைக் கேள்விப்பட்டு நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்கு மதித்துக் கீழ்வருமாறு கூறினார்கள் எனக் கூறப்படுகின்றது.

رحم الله قسًّا انّي لارجو يوم القيمة ان يبعث امة واحدة

கஸ்ஸுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக. (قيامة) முடிவு நாளில் அவரைத் தனித்த ஒரு சமூகமாய் எழுப்பப்பட நான் விரும்புகிறேன் என்பது இதன் கருத்து. உக்காள் சந்தையில் அவர் செய்த பிரசங்கம் ஒன்றின் மொழிபெயர்ப்பு வருமாறு:

மனிதர்களே கேளுங்கள்; பேணுங்கள்; வசித்தவன் இறந்தான்; அழிந்தான். வருகிறவை வரும்; இரவோ இருண்டது ; பகல் ஒடுங்கியது; வானமோ இராசி களையுடையது; நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன; கடல் கொந்தளிக்கின்றது; மலைகள் உயர்ந்து அசையாது தரித்திருக்கின்றன. பூமியோ பரந்திருக்கிறது; ஆறுகள் ஓடி இயங்குகின்றன; வானத்திலே செய்திகள் இருக்கின்றன; பூமியிலே உதாரணம் இருக்கின்றது. மனிதர்களின் நிலைமை என்னே! அவர்கள் போகிறார்கள், திரும்புகிறார்க ளில்லை. அவர்கள் விரும்பி அங்குத் தங்கி விட்டார்களோ! அல்லது விட்டுச் சென்று உறங்கிவிட்டார்களோ! இயாது கூட்டத்தாரே, பிதாக்களும் முற்பிதாக்களும் எங்கே? சக்திமிக்க பிர்ஔன்கள் எங்கே? உங்களைப் பார்க்க அவர்கள் பொருள்களில் அதிகமானவர்களாகவும் வாழ்நாட்கள் நீளமானவர்களாகவும் இருக்கவில்லையா? காலம் அதன் சக்தி கொண்டு அவர்களை அரைத்து விட்டது. மேலும் அதன் நீளத்தால் அவர்களைக் கிழித்தெறிந்தது.

في الذاهبين الأولين من القرون لنا بصير
لما رأيت مواردا للموت ليس لها مصادر
ورأيت قومي نحوها يسعى الاصغار والاكابر
لايرجع الماضي اليّ يَ ولا من الباقين عابر
ايقنت اني لامجا لة حيث صارالقوم صابر

“முந்திச் சென்று போன கூட்டங்களிலே நமக்கு முன் மாதிரியை அறிவிருக்கிறது. மரணத் துறைகளை நான் கண்டபொழுது அதைத் தடுக்க முடியாதென அறிந்தேன். என் கூட்டத்தில் பெரியோரும் சிறியோரும் அதன் பக்கம் சென்றிருக்கிறதைக் கண்டேன். சென்றவன் என் பக்கம் திரும்புகிறானில்லை. இருக்கிறவனும் என்றும் இரான். அக்கூட்டம் சென்ற வழியில் தவறாமல் நானும் செல்வேன் என நிச்சயம் கொண்டுள்ளேன்” என்பது இதன் கருத்தாகும்.

## அவரின் அறிவுத் துணுக்குகள்.

♦ ஒருவன் உன்னைப் பழித்தால் அப்பழிப்பு அவனிலுமிருக்கும்.

♦ ஒருவன் உனக்கு அநீதம் செய்தால் அவனுக்கு அநீதம் செய்கிறவனை அவன் காண்பான்.

♦ ஒன்றை நீ விலக்குவாயின் அவ்விலக்கலை உன்னைக் கொண்டு ஆரம்பிப்பாயாக.

♦ எளிமையில் பிறரை எதிர்பாராதவனாயும் ஐசுவரியத்தில் கூட்டானவனாகவும் இருந்து கொள்.

♦ விவேகி ஒருவன் ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அவனிடம் ஆலோசனை கேளாதே.

♦ ஒருவன் பசித்திருக்கும்போது அவன் விளக்கமுள்ளவனாயினும் அவனிடம் ஆலோசனை கேளாதே.

♦ அஞ்சியவன் அவன் உபதேசியாக விருப்பினும் அவனிடமும் ஆலோசனை கேளாதே.

---

இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் வபாத்தாகி ஓர் ஆண்டு கழிந்த பின் ஸமர்கந் நகரில் மழை பெய்யாததால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. பல முறை மழைதேடித் தொழுதார்கள். துஆக் கேட்டார்கள். மழை கிடைக்கவில்லை.

இறுதியாக ஒரு நல்லடியார் ஸமர்கந்த் காழியிடம் சென்று, ஸமர்கந்த் மக்களை அழைத்துக் கொண்டு இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் கப்றடிக்கு சென்று அங்கிருந்து கொண்டு அல்லாஹ்விடத்தில் துஆ கேளுங்கள். அல்லாஹுதஆலா உங்கள் துஆவை கபூல் செய்வான் என்று ஆலோசனை கூறினார்கள்.

மக்களை அழைத்துக்கொண்டு இமாம் புகாரி (ரஹ்) அவர்களின் கப்றடிக்குச் சென்ற ஸமர்கந்த் காழி அங்கிருந்து கொண்டு மக்களோடு உருக்கமாக துஆக் கேட்டார். தமது துஆ கபூலாவதற்காக சிபாரிசு செய்யுமாறு இமாம் புகாரி (ரஹ்) அவர்களிடம் வேண்டுதல் விடுத்தார். துஆக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே வானத்தில் மேகங்கள் திரண்டு சூழ்ந்து கொண்டன. பின் மழை கொட்டு கொட்டாகக் கொட்டியது. மக்கள் ஸமர்கந்த் செல்வதற்கு சிரமப்படும் அளவு மழை கொட்டியது.

(ஆதாரம்: தபகாத்துஷ் ஷாஅத்துல் குப்றா, பாகம் 02, பக்கம் 15)

# புனித தர்ஹா கமிட்டியின் முதல் காணொளிக் கூட்டம்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

திருச்சியில் அமையவிருக்கும் ஆருயிர் செய்கு நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹில் அழீம் அவர்களின் புனித தர்ஹா ஷரீப் நிர்வாக மற்றும் உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம்.

நாள்: 26.04.2024. இடம்: காணொளிகூட்டம். ஆலோசனைக் கூட்ட எண்: 2024/001

தலைமை: சங்கைக்குரிய செய்கு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்.

முன்னிலை: சங்கைக்குரிய சாஜித் அலி மௌலானா அவர்கள்.

ஒருங்கிணைப்பாளர்: கே.எஸ். அப்பாஸ் ஷாஜஹான். எம். ஹைதர் நிஜாம்.

## ஆலோசிக்கப்பட்ட கருத்துகள்.

1. புனித ரௌளா ஷரீப் கஃபத்துல்லா போன்ற அமைப்பில் கட்டுவது.

2. தனித்துவமான வடிவமைப்பு – முகலாய மற்றும் ஈரானிய (பழங்கால மற்றும் நவீன) முறையில், முடிந்த அளவு உயரமான அளவில் வடிவமைப்பது.

3. ரவ்லா ஷரீபின் கட்டுமானத்தை முடிந்த அளவு உடனேயே ஆரம்பிப்பது.

4. புகழ்பெற்ற தர்காக்களை விட சிறப்பான முறையில் வடிவமைப்பது.

5. சுற்றுச் சுவர் கட்டுவது, வரக்கூடிய பக்தர்கள் ஒளு எடுப்பதற்கு, மற்றும் தொழுவதற்கு பள்ளி, மற்றும் கழிப்பறைகள் கட்டுவது. அதற்குரிய முறையில் சிறப்பான வடிகால் (டிரைனேஜ்) அமைப்பது.

6. வரக்கூடிய பக்தர்கள் குடும்பத்தினர் தங்குவதற்கு உள்ள வசதிகள், நாயகம் அவர்களின் சன்னிதானத்தில் திருமணமோ வேறு நிகழ்வுகளோ, சபைக் கூட்டங்களோ நடத்த விரும்பும் பக்தர்களுக்காக பெரிய ஹால் ஆடிட்டோரியம் அமைப்பது.

7. அன்பிற்குரிய வாப்பா நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆவணங்கள், புகைப்படங்கள் போன்றவற்றை அருங்காட்சியப்படுத்துதல் (மியூஸியம்)

8.நாயகம் அவர்களின் ஆக்கங்களை விற்பனை செய்வதற்காக (புக் ஷாப்) கடை கட்டுவது.

9. தர்காவின் வருமானத்திற்காக கடைகள் கட்டி வாடகைக்கு விடுவது.

10. வரக்கூடிய பக்தர்கள் மற்றும் குடும்பத்தினர் தங்குவதற்கு உரிய தங்கும் விடுதி கட்டுவது.

11. பெண்கள் இலகுவாக வந்து சங்கைக்குரிய ரவ்லா ஷரீஃபை தெளிவான முறையில் ஜியாரத் செய்வதற்கு உரிய முறையில் வடிவமைப்பது.

12. சுற்றிலும் அனைவரும் வந்த செல்வதற்கு உரிய நுழைவு வாயில் அதிகமான அளவில் அமைப்பது.

13. தேவையான அளவிற்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (தேவைப்பட்டால் நிலத்தடி (அண்டர் கிரவுண்ட பார்கிங்) அமைப்பது)

14. மிகவும் உயரமான மினாரா, மற்றும் குப்பா அமைப்பது.

15. எந்த வெயில் காலத்திலும் தர்காவில் குளுமையாக இருப்பதற்கு புதிய முறை சுய குளிர்ச்சி குளிர்சாதனம் அமைப்பது

16. தேவையான மின்சாரத்திற்கு சூரிய சக்தி (சோலார் சிஸ்டம்) முறையைப் பயன்படுத்துவது.

17. சுற்றிலும் மரங்கள் நடுவது.

18. தர்கா நிலத்துக்குரிய ஆவணங்களை முறைப்படுத்தி, மேற்கண்ட அனைத்துத் தேவைகளையும் உட்படுத்தி வடநாடு அல்லது வெளிநாடுகளில் உள்ள சிறந்த கட்டட வடிவமைப்பாளர்களைக் கொண்டு சிறப்பான வகையில், அனைத்து மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் படியான வடிவமைத்து அதற்குரிய புளூ பிரிண்ட் தயார் செய்வது.

19. அடுத்த மாதம் வரக்கூடிய திருமுல்லைவாசல் கந்தூரியின்போது கட்டட வேலைகளை ஆரம்பித்து விட அனைத்து முயற்சிகளையும் எடுப்பது.

20. கந்தூரியின் போது அனைத்து ஆன்மீக சகோதரர்களும் நேரில் ஒன்று கூடி இது சம்பந்தமாக மேற்கொண்டு ஆலோசனைகளையும் பங்களிப்புகளையும் செய்வது.

21. குழுவில் இருந்த அனைத்து சகோதரர்களும் தங்களது மேலான முதல் கட்ட பங்களிப்புகளை அறிவித்தார்கள்.

நமது இந்த முயற்சி மாபெரும் வெற்றி அடைய சங்கைமிக்க ஷெய்கு நாயகம் அவர்களின் பொருட்டால் எல்லாம் வல்ல ஏக இறையைப் பிரார்த்திப்போம்.

அனைவருக்கும் நன்றி.

தகவல்: அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய்.

# கண்டேன் ஓர் அற்புதக் கனவு

23.3.2024 சனிக்கிழமை (ரமளான் பிறை –13) பகல் நைட் டியூட்டி முடித்து வந்த ஆழ்ந்த உறக்கத்தில் கண்ட கனவு

துபையில் எனது அடுக்குமாடி வீட்டு (பிளாட்) முகப்புக் கூடத்தில் (ஹால்) தரையில் பாய் விரித்து, பனியன், கைலியில், ஓய்வாக அமர்ந்து, சுற்றிலும் உள்ள ஆன்மீக சகோதரர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால் யாருடைய முகமும் சரியாக நினைவில்லை.

திடீரென்று பக்கத்து அறையின் கதவைத்திறந்து கொண்டு, சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள், வெளியே வந்து என்னை அழைக்கிறார்கள். உள்ளே வரும்படி சைகை செய்கிறார்கள். நானும் துள்ளி எழுந்து, ஒரு துண்டை மேலில் சுற்றிக்கொண்டு, பணிவுடனும், பக்தியுடனும் தர்பாரின் அறைக்குள் செல்கிறேன்.

அப்பொழுது தர்பாருடைய திருமுகம் மகிழ்ச்சியுடனும், ரம்மியமாகவும் இருக்கின்றது. பார்ப்பதற்கு எனக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகிறது.

அந்த அறையில் மரியாதைக்குரிய கலீபா முஸ்தபா அண்ணன் அவர்களுடைய மூத்த மகளும், தம்பி எம்.ஏ. சாதிக் அவர்களுடைய மனைவியும் ஆகிய பிள்ளை. பாகிரா, நாயகம் அவர்களிடம் ஒரு பொருள் அட்டவணையைக் காட்டி, வாப்பா, இவையெல்லாம் வாங்கச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்

நான், நாயகம் அவர்களின் அருகில் நின்று கொண்டிருக்கிறேன். வாப்பா நாயகம் என்னைப்பார்த்து, புன்சிரிப்புடன் கண்ணை அசைக்கின்றார்கள். அப்பொழுது எனக்கு நினைவு வருகிறது. அடடே நாயகம் அவர்களுடன் கடைவீதிக்குச் செல்லனுமே, என்ற எண்ணத்துடன், அனுமதி பெற்று வெளியே வருகிறேன். அப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது, முன்பு உடுத்தியிருந்த

கால்சரத்தின் உள்பாக்கெட்டில் நாயகம் அவர்களின் நதர் பணம் வைத்திருந்தது. அதைத் தேடிப்பார்க்கிறேன். அப்படியே, நான் கொழுவி வைத்திருந்தபடியே, பத்திரமாக இருக்கின்றது. அதை எடுத்துக் கொண்டு, உடுப்பு மாற்றிக் கொண்டு, நாயகம் அவர்களின் அறைக்கு வருகிறேன். இத்துடன் கனவு கலைந்து விட்டது.

குறிப்பு.

1. நாயகம் அவர்கள், அறையில் இருந்து வெளியே வந்து எனது பெயரைச் சொல்லி அழைத்ததைத் தவிர வேறு எந்த வார்த்தையும் பேசவில்லை. அனைத்தையும் கண் அசைவிலேயே உத்தரவிடுகிறார்கள்.

2. அவர்களும் மிக்க மகிழ்ச்சியுடனிருக்கிறார்கள், அவர்களின் திருமுகம் பார்ப்பதற்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

3.நாயகம் அவர்கள் மறைவு பற்றிய நினைவே இல்லை. அவர்கள் முன்பு இருந்தது போலவே, அவர்களின் தொடர்ச்சியான வெளிநாட்டு விஜயம் போலவே (துபை விஜயம்) உணர்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

*செய்தி : அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய்.*

# படித்ததில் பிடித்தது

சந்திர குப்த மௌரியப் பேரரசரின் ஆசானும், மந்திரியும் தலைசிறந்த ராஜதந்திரியும், எளிமையானவருமான, சரித்திரம் புகழ் பெற்ற சாணக்கியர்,

தட்சசீலா சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்குக் கூறிய முக்கிய அறிவுரை:

ஒரு சிஷ்யன் தனது குருவைக் காணும்போது அல்லது விடைபெறும் போது, அவருக்குப் பிடித்த ஏதாவதொன்றை குருதட்சணையாகக் கொடுக்க வேண்டும். தனது அன்பையும், நன்றியையும் காட்டுவதற்குரிய முறை அதுதான்.

குரு நமக்குச் செய்த பேருபகாரம் வீணாகாதபடி இப்படிச் செய்வதே தகுதி.

உங்களுக்குச் சாத்தியமான அளவில் அவருக்குக் கொடுத்தாலும் போதும். சிறிதாவது கொடுப்பதுதான் அவசியம். கறவையற்றுப்போன பசுமாடுபோல, சும்மா புல்லைத் தின்றுவிட்டு பதிலுக்கு ஒன்றும் கொடாமல் இருந்து விடாதீர்கள்.

இது ஒவ்வொரு சிஷ்யரும் கடைப்பிடிக்க வேண்டியது எக்காலத்திலும் பொருத்தமானதாகும். *செய்தி : அப்பாஸ் ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய்.*

# ஆச்சரியம்..ஆனால்...உண்மை!

கே.எஸ். அப்பாஸ் ஷாஜஹான் பி.எஸ்.ஸி. எம்.பி.ஏ. ஹக்கிய்யுல் காதிரிய்

1. மகத்துவமிக்க நமது உயிரினும் மேலான வாப்பாநாயகம் அவர்களின் மகிமைகள் குறித்தும் அவர்களின் மறைவுநிகழ்வுகள் குறித்தும் அவர்களின் திருப்பேரர் நமது இளையவாப்பா நாயகம்,

யாஸீன் அலி மௌலானா அவர்களின் தகப்பனார் சங்கைக்குரிய சாஜித் அலி மௌலானா அவர்களுடன் சமீபத்தில் அலைபேசியில் நீண்ட நேரம் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது அவர்கள், நமது இளைய வாப்பா நாயகம் சங்கைக்குரிய யாஸீன் அலி மௌலானா அவர்கள் குறித்து, பின்வரும் சில முக்கியமான தகவல்களை என்னிடம் பகிர்ந்துகொண்டார்கள். அவற்றை ஆச்சரியத்துடனும் பிரமிப்புடனும் கேட்ட எனக்கு மறைந்து வாழும் நமது வாப்பா நாயகம் அவர்கள்தான் இன்று சங்கைக்குரிய இளைய வாப்பாநாயகம் யாஸீன் அலிமௌலானா அவர்கள் தோற்றத்தில் வெளியாகி இருக்கிறார்கள் என்பதை பரிபூரணமாக உறுதிப் படுத்தியது. அவர்கள் குறிப்பிட்ட சில முக்கியமான நிகழ்வுகள் இதோ:

நம் உயிரினும் மேலான செய்குநாயகம் அவர்களின் திருஉடலை திருச்சியில் நல்லடக்கம் செய்துவிட்டு இலங்கை திரும்பிய சில நாட்களில் தனக்கு கலீபா ஆலிம்புலவர் அவர்களிடமிருந்து ஒரு அலைபேசி அழைப்புவந்ததாம்.

அதில் அவர்கள் பின் வருமாறு கூறினார்களாம். திருமுல்லைவாசல் தர்ஹாவிலும், சம்பைப்பட்டினம் தர்ஹாவிலும் தலைமாட்டில் வைக்கப்படுள்ள மீஜான் கற்களில் எழுதப்பட்டுள்ள பைத்துகள் சங்கைக்குரிய நமது செய்குநாயகம் அவர்களால் எழுதப்பட்டவை. அதுபோல் திருச்சி தர்ஹாவில் வைக்கப்படவுள்ள மீஸான் கல்லிலும் பைத்து இருக்கவேண்டும்.

சங்கைக்குரிய யாஸீன் அலி மௌலானா அவர்கள் பைத்து எழுதித்தருவார்களா? என்று கலீபா ஆலிம் புலவர் தன்னிடம் கேட்டபோது, தன் மகனாரிடம் கேட்டதாகவும், அதற்கு அவர்கள் அதனைத் தான் தான் எழுதவேண்டும் என்றும், எழுதித் தருகிறேன் என்றும் சொல்லுங்கள் வாப்பா! என்றும், மகனார் கூறியதை கலீபா ஆலிம் புலவரிடம் கூற, அவர் மிகுந்த திருப்தியுடன் மாஷா அல்லாஹ் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தாராம்.

இந்த நிகழ்வு நடந்து சில நாட்களுக்குள், ஒரு முறை மகனாரிடம், மகன்! நீங்கள் ஓரிருவருடங்கள் எகிப்தில் உள்ள அல்அஜ்ஹர் போன்ற சிறந்த ஒரு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அரபுமொழியில் உயர்கல்வி கற்றுவரலாமே என்று கேட்க, அவர்கள், தான் வாப்பாநாயகம் அவர்களிடம் (பாட்டனாரிடம்) கற்றகல்வியே போதுமானது என்றும், இனி எங்கும் போய்க் கற்கவேண்டியதேவை இல்லை என்றும், தன்னால் இனிமேல் சுயமாக சிந்தித்து விளங்கிக்கொள்ள முடியும் என்றும் கூறியதைக்கேட்டு ஆச்சரியப்பட்டதாக என்னிடம் கூறினார்கள்.

இந்நிகழ்வு, நமக்கு ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்துகிறது. மஹா சங்கைபெருந்திய குத்புல்ஃபரீத் யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள், தமது இறுதி இந்தியப் பயணத்திற்கு சில நாட்களுக்கு முன்னர், தங்கள் மகனார் சங்கைக்குரிய நமது வாப்பா நாயகம் அவர்களிடம், மகன்! நான் இல்லாத காலத்தில் நீங்கள் யாரிடம் உங்கள் சந்தேகங்களைக் கேட்பீர்கள்? என்று வினவியதற்கு, நமது செய்குநாயகம் அவர்கள், வாப்பா! தங்களிம் கால்மடித்து ஓதியபின் இனி யாரிடமும் நான் கால்மடித்து விளக்கம் கேட்டுப்போகமாட்டேன், என் மனதில் சரி எனப்படுவதே அதற்குரிய விளக்கமாக இருக்கும் என்று தகப்பனாரிடம் கூற, அதுகேட்ட அவர்கள் மகிழ்ச்சியடைந்ததாக வாப்பா நாயகம் அவர்கள் நம்மிடம் பலமுறை சொல்லிக்காட்டியுள்ளார்கள்.

தமது திருப்பேரரிடம், நம் ஆருயிர் ஷெய்குநாயகம் அவர்கள் தங்களின் மறைவுக்கு சில நாட்களுக்குமுன், ஒருமுறை மகன்! இங்கு இருக்கும் கிதாபுகள் எல்லாம் உங்களுக்குத்தான், திருச்சியில் வீட்டிலும் சில கிதாபுகள் உள்ளன! எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, தமது மூத்தமகளாரிடம், தம்திருப்பேரர் குறித்து, மகள்! சின்னவர் நல்லபடி அரபு ஓதிக்கொண்டார்! இனி அவரே சமாளித்துக்கொள்வார்! என்று கூறி நம் உயிரினும் மேலான வாப்பா நாயகம் அவர்கள் மகிழ்ந்தார்களாம்.

ஒரு சமயம் சில ஆத்மசகோதரர்கள் சங்கைக்குரிய இளைய வாப்பா நாயகம் யாஸீன் அலி மௌலானா அவர்களுடன் தொடர்புகொண்டு, நமது வாப்பாநாயகம் குறித்து ஒரு சிறந்த அரபு அறிஞரிடம் கொடுத்து மௌலிது ஒன்றை எழுதி எடுக்க அனுமதிகேட்டபோது, இல்லை, அதுதன்னால்தான் எழுதப்பட வேண்டும். அவசரப்படவேண்டாம், காலம்போகப்போகத்தான் தகவல்கள் சேரும். அதுபூரணமான ஒரு மௌலிதாக இருக்கவேண்டும், தன் பாட்டனாரே யாஸீன் மௌலானா மௌலிது எழுதியது சில வருடங்களுக்கு முன்புதானே என்று சொல்லியுள்ளார்கள்.

வாப்பா நாயகம் அவர்களிடம் திண்டுக்கல் கலீபா மர்ஹூம் அப்துஸ்ஸலாம் அண்ணன் அவர்கள், வாப்பா! தங்களுக்குத்தான் ஆண்வாரிசுகள் இல்லையே, தங்களின் சேவைகளை யார்தான் தொடர்ந்து எடுத்துச் செய்வார்கள்? என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள், என் மூத்த மகளுக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கும் என்று சின்னதாக ஒரு பதில் சொன்னார்களாம். அப்போது அவர்கள் மகளாருக்கு, திருமணம் கூட ஆகவில்லையாம்.

வாப்பா நாயகம் குடும்பத்திலோ அவர்கள் அண்ணன்மார் குடும்பத்திலோ 30 வருடங்களாக ஆண்குழந்தை ஒன்றே பிறக்கவில்லையாம். சங்கைக்குரிய சாஜித்அலி மௌலானா அவர்கள் (இவர்கள்தான் வாப்பா நாயகத்தின் மூத்த மகளாரைத் திருமணம் செய்தார்கள்) தமக்கு ஆண்குழந்தை பிறந்தால், அதற்குத் தன்பாட்டனார் யாஸீன் நாயகம் அவர்கள் பெயர் வைப்பதாகவும் அவர்களைப்போல் ஒரு சிறந்த மேதையாக வளர்த்துவர வேண்டும் என்ற நிய்யத்துடனும் இருந்தார்களாம். ஆனால், அவர்களுக்கு முதலில் பிறந்தது பெண்குழந்தைதான், அவர்களுக்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தவர்கள் தான் நமது செய்குநாயகம், இளைய வாப்பா நாயகம் அவர்கள்.

இவர்கள், தாயார் வயிற்றில் இருக்கும் போது இவர்களின் சகோதரிக்கு வயது 5. அப்போது அவர்கள் சொன்ன ஒரு கராமத்தை வாப்பா நாயகம் அவர்கள் கூற நாம் கேட்டிருக்கிறோம். நிய்யத்துப்படி திருமுல்லைவாசல் பாட்டனார் தர்பாரில் பாட்டனார் பெயரை நமது வாப்பா நாயகம் அவர்கள் வைத்தார்கள். தமது 4 வயதில், அதுவும் வெறும் நான்கே மாதத்தில் குழந்தை குர்ஆனை பூரணமாக ஓதிமுடித்து தனது பாட்டனார் சங்கை மிக்க நமது வாப்பா நாயகம் அவர்களிடம் அரபுமொழி (நஹ்வு கிதாபு) கற்க ஆரம்பித்தார்களாம்.

இவர்களை குழந்தைப் பருவத்தில் இருந்தே நான் அறிவேன். சங்கைமிகு நம் வாப்பா நாயகம் அவர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்தவர்கள். வாப்பா நாயகம் அவர்களின் வயதில் மூத்த முரீதுப்பிள்ளைகளை, உறவுமுறை கூறியே இன்று வரை அன்பாக அழைப்பார்கள். மகத்துவமிக்க நமது செய்குநாயகம் அவர்களின் அடக்கம், பணிவு, அன்பு, அரவணைப்பு, போன்ற அத்தனை குணங்களும் இவர்களிடம் காணலாம். அவர்களின் தாயார் இவர்களை மிகச்சிறப்பான ஒருபிள்ளையாக வளர்த்து இன்று நம் அனைவருக்கும் வழிகாட்டியாகத் தந்திருக்கிறார்கள். ஒரு பிரகாசமான எதிர்காலம் நமக்கும், நமது சந்ததிகளுக்கும் நம் கண்முன்னே தெரிகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

சங்கைக்குரிய நமது இளைய வாப்பா நாயகம் அவர்களுக்கு தங்களது இரண்டாவது மகளின் மகளாரை, வாப்பா நாயகம் அவர்கள் முன்னின்று திருமணம் செய்து வைத்தார்கள். அதுமுற்றிலும் அவர்கள் பரிபூரண விருப்பப்படி நடந்த ஒரு திருமணம். அன்று அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியில் இருந்ததை நம்மில்பலரும் கண்களால் கண்டு மகிழ்ந்தோம் அல்லவா? இளைய வாப்பா நாயகம் அவர்களின் துணைவியார்தான் வெலிகமையில் வாப்பாநாயகம் அவர்களின் அருகிலேயே இருந்து, கண்ணைப்போல் பார்த்து, சேவை (கித்மத்) செய்தவர்கள். (இச்செய்தியை சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள் என்னிடம் நேரிலும் சிலமுறை சொல்லிக் காண்பித்து இருக்கிறார்கள்.)

சங்கைக்குரிய இளைய வாப்பா நாயகம் அவர்கள், பி.இ. பட்டப்படிப்பு முடித்து சென்னையில் இருக்கும் சமயத்தில், சங்கைக்குரிய செய்குநாயகம் அவர்களின் இந்திய விஜயத்தின்போது ஒரு முறை சென்னையில் வைத்தும், மற்றும் சென்ற 2023 பிப்ரவரிமாதம் தாங்களின் இந்திய இறுதி விஜயத்தின்போது திருச்சி தர்பார் நாயகத்தின் திரு இல்லத்தில் வைத்தும், அதே 2023 ஜுலை மாதம் தங்களின் சிங்கப்பூர் இறுதிவிஜயத்தின்போதும், நூற்றுக் கணக்கானவர்களுக்கு பைஅத் கொடுக்கும்போது தமது திருப்பேரரையும் அழைத்து பைஅத் செய்து வைக்கும் முறையைக் காட்டிக்கொடுத்துள்ளார்கள். ரோஜாச் செடியில் ரோஜாதானேமலரும்? உண்மையில்நாம் பாக்கியம் பெற்றவர்கள்தாம்.

கடந்த ஒரு வருடமாக வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் தரீக்கா, மத்ரஸா, மற்றும் அவர்களின் ஆன்மீக சேவைகளின் எதிர்காலம் பற்றி எந்த ஒரு கவலையும் அற்றவர்களாக இருந்தார்களாம். காரணம், அவற்றின் எதிர்காலத் தலைமை, தம் கண்முன்னே வளர்ந்து வருவதை அவர்கள் கண்டு மகிழ்ந்ததுதான். அவர்கள் இந்தக் காலகட்டத்தில் குடும்பத்தாரின், மற்றும் குறிப்பாக தமது முரீதுப் பிள்ளைகளின் நல்வாழ்விற்காக மட்டுமே, ஓய்வின்றி துஆச் செய்தவர்களாகவே இருந்தார்கள். இதை நானும், மற்றும் அவர்களை இந்தக் காலகட்டத்தில் நேரில் தரிசித்த பல ஆன்மீக சகோதரர்களும் கண்கூடாகவே கண்டிருக்கிறோம்.

சங்கைக்குரிய சம்பைப்பட்டினம் அப்பாநாயகம் அவர்கள் காலத்திலே பல முரீதீன்கள் வாழ்ந்தார்கள். அதன்பிறகு அவர்களுடைய வாரிசாகிய குத்புல் ஃபரீத் யாசீன் வாப்பா நாயகம் அவர்களின் காலத்தில் இன்னும் அதிகமான முரீதீன்கள் வாழ்ந்தார்கள்.

அதன் பிறகு மகத்துவமிக்க நமது வாப்பா நாயகம் அவர்களுடைய காலத்திலே அதைவிட இன்னும் அதிகமான முரீதீன்கள் உலகின் பலபாகங்களில் இருந்தும்,

உண்மையை விளங்கி, அவர்களின் அருளினை நாடி அவர்களின் திருக்கரம் பிடித்து முரீதுகள் ஆனார்கள். இனிவரக்கூடிய காலங்களில் சங்கைமிக்க இளையவாப்பா நாயகம் அவர்களின் காலத்திலே இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆன்மதாகம் உள்ள நல்ல உள்ளங்கள் அவர்களின் திருக்கரம் பிடித்து நேர்வழி பெறுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆமீன்.

– ஊழியன் ஷாஜஹான். –

---

# ஞானம்...

இருள் கலைத்த ஒளி
மௌனம் உடைத்த கனம்
அது ஞானியர்கள் தேசத்தின்
தேசிய கீதம்

ஞானம்....
பேரண்டத்தின்
மெல்லிய நாதம்
அது....
கொட்டும் அருவியில்
பாறை ஓரத்தில் அமர்ந்து
அடை காக்கும்
குருவியின் அமைதி

ஞானம்...
கரியெனும் வைரம்
வைரமென்ற கரி
அது...
மறைக்கப்பட்ட பொக்கிஷம்
வெளியான ரகசியம்

ஞானம்...
கூட்டை உடைத்து பறந்து வர
குளவியிடும் ரீங்காரம்
அது...

இறைவனில் குரு
குருவில் இறைவன்

ஞானம்...
ஏழு வானங்களிலுள்ள இறைவனை
தன்னுள் தரிசிக்க வைக்கும்
அது...
காலத்தின் கதாநாயகரை (ஸல்...)
கண்முன்னே காட்டும்
ஞானம்...

சொர்க்க நரக இரண்டையும் துறந்து
இறைவனை நேசிக்க வைக்கும் அது...
செயல்களை இபாதத்தாக
மாற்றம் செய்யும் இரசவாதம்

ஞானம்...
நாதர் கலீல் அவ்ன்
காட்டும் நாயகர் யாஸீன் அலி
என்றும் இதுவே கதி!

**அபு ஷாஹிர்**
**ஷார்ஜா**

# ஒன்றே இரண்டுபோல் இயங்குக....!

*(சென்ற 2024 ஏப்ரல் இதழில் மருத்துவம் தொடர்பாக சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் வழிகாட்டுதல் பற்றி எழுதுமாறு வாசகப் பெருமக்களிடம் வேண்டுகோள் வைத்திருந்தோம். மதிப்பிற்குரிய சென்னை கலீல் இப்றாஹீம் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தமக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றி விளக்குகிறார்கள். படித்துப் பயன்பெறுவோம்.*

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹு,

சுமார் பதினைத்து வருடங்களுக்கு முன்னால், என் மகனுக்கு உடல் நலமின்மையால் நீண்ட நாட்கள் ஒரு மருத்துவரிடம் சிகிச்சை அளித்து வந்தோம். அப்பொழுது சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களிடம் எனது மகனுக்கு ஷிஃபா கிடைக்க துவா செய்ய வேண்டிக் கேட்டுக்கொண்டோம். அதற்காக சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்கள் துஆ செய்ததோடு, அந்த மருத்துவரை உடனடியாக விட்டு விட்டு வேறு மருத்துவரிடம் காண்பிக்குமாறு உத்தரவிட்டார்கள். ஆச்சரியம் கலந்த அதிசயமாக மருத்துவரை மாற்றிய சில நாட்களிலேயே என் மகன் பூரண குணமடைந்தார். அல்ஹம்துலில்லாஹ்.

மற்றொரு நிகழ்வில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய மூத்த சகோதரர் ஒருவர், சிறுநீரகக் கோளாறு காரணமாக கிட்டத்தட்ட ஒருவருடம் டயாலிஸிஸ் செய்து மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அது சமயம் நான் அவருக்கு எனது இரண்டு கிட்னிகளில் (சிறுநீரகம்) ஒன்றை அவருக்குத் தரலாம் என்ற எண்ணத்துடன் அனுமதி கேட்கவும், துவா மற்றும் ஆசீர்வாதங்கள் வேண்டியும் சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களைத் தொடர்புகொண்டபோது தாராளமாகக் கொடுங்கள். **உங்களது ஒரு கிட்னி (சிறுநீரகம்) இரண்டு கிட்னிபோல் வேலைசெய்யும்,** என்று ஊக்கமும் நம்பிக்கையும் தந்தார்கள். அல்ஹம்துலில்லாஹ். வேறு யாரால் இவ்வளவு ஆணித்தரமாக நம்பிக்கையூட்ட முடியும்.

அதன்பின் வாப்பா நாயகம் அவர்களின் துஆ, ஆசீர்வாதத்துடன் நடந்த மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சையால் எனது மூத்த சகோதரர் நல்ல ஆரோக்கியத்துடன் எட்டு ஆண்டுகள் சகஜ வாழ்க்கை வாழ்ந்து சமீபத்தில்தான் இறை அழைப்பை ஏற்றுக்கொண்டார். சங்கைமிகு ஷெய்கு நாயகம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலாவின் பெருங்கருணையாலும் நான் மீதமுள்ள

என்னுடைய ஒரு கிட்னியுடன் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஷுக்ரு அல்ஹம்துலில்லாஹ். சங்கைமிகு வாப்பா நாயகம் ஷுக்ரு.

நம் ஒவ்வொருவர் வாழ்விலும் நமது சங்கைமிகு வாப்பா நாயகத்தின் பொருட்டால் எத்தனையோ கராமத்துகள் நடந்திருக்கின்றன. என் வாழ்க்கையிலும் முக்கியமான தருணங்களில் எத்தனையோ கராமத்துகளால் பெறற்கரிய பேறுகள் பல பெற்றுள்ளேன்.அவற்றில் மருத்துவம் சம்பந்தமான இந்த இரு நிகழ்வுகளையும் ஆத்ம சகோதரர்களுடன் பகிர்ந்துகொள்வதை பாக்கியமாகக் கருதுகிறேன். வஸ்ஸலாம். *இப்ராஹீம் கலீல் ஹக்கிய்யுல் காதிரி, சென்னை.*

(அல்லாஹ் வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டால் மேலும் பல்லாண்டு வாழ்க என மனதார துஆ செய்கிறோம். அல்ஹம்து லில்லாஹ்.)

---

**அன்பு வாசகப் பெருமக்களே!**

**சென்ற இதழில் மருத்துவம் பற்றிய உங்கள் அனுபவங்களைப் பதியுமாறு வேண்டுகோள் வைத்தோம்.**

**இந்த முறை வியாபாரம் பற்றி சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் அளித்த வழிகாட்டுதல்கள்– அறிவுரைகள் – ஆலோசனைகள் பற்றி எழுதுங்கள்! உங்கள் அனுபவம் எத்தனையோ சகோதரர்களுக்கு வழிகாட்டுதலாக இருக்கலாம்.**

---

♦ பரிசுத்த கலிமாவினிமித்தமே வேதங்கள், நபிமார்கள், முர்ஸல்கள், வேத பாரங்கதர்கள், பரமார்த்தீக உபந்நியாசகர்கள் யாவரும் மனிதரளவில் அனுப்பப்பட்டனர். அதனிமித்தமே சரித்திரங்களில் நிகழ்ந்த – நிகழ்கின்ற – நிகழப் போகிற சம்பவங்கள் யாவும், விதியில் நிகழ்ந்தன. உலக வேறுபாட்டிற்கும் அதன் மோஷத்திற்கும் ஆம், அதன்பிறப்பு, இருப்பு, இறப்பு எல்லாவற்றிற்கும் அதுவே காரணமாகும்.

♦ மனிதன் சத்திய கர்த்தாவின் சிங்காசனம், அதன் பிரதிபிம்பம், அதன் தோன்றுதுறை என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுவது இந்தக் கலிமாவின் அர்த்த புஷ்டியேயாகும்.

♦ மனிதன் ஆத்ம பலம் பெற்று, அவன் புலன்கள் சக்திமிக்கதாகி, சர்வ உலகங்களிலும் ஆத்மார்த்தமாய்ப் பரிணமித்துப் பரமார்த்தீக இலட்சிய இலட்சணங்களுடன் திகழ்ந்து, நித்திய ஜீவன் பெற்று, சம்பூரணானந்தனாகி சர்வமும் சம்பூரணமான சச்சிதானந்தத்தின் அம்சமாகப் பரிணமிக்க, இந்தக் கலிமா ஜீவாமிர்த ஜீவசக்தியாயும் ஒப்பற்ற இன்றியமையாத தனிப்பெருஞ் சாதனமாயும் இருக்கிறது.

**"கலிமா விருட்சக் கனிந்த கனி " நூலில்**

**குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள்.**

# சற்குரு சரித்திரம் 2

*(கலீபா எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

கல்வியில் பெரும் ஆர்வததையுமெ, அள்ளித்தந்து விட்டது, கல்வி கற்பதின் மேல் அவர்களுக்கு இருந்த ஆர்வத்தினால், அவர்களுக்கு ஏற்பட்ட மலைபோன்ற இன்னல்களையும், பெரிதெனக் கருதாமல் தொடர்ந்து படிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். அருமைத்தாயாரின் மறைவும ஆருயிற தந்தையின் நினைவும் கல்வி கறபதின் மேலிருந்த ஆர்வத்தால் மறைந்து போயின.

அருமைத்தாயாரின் அரவணைப்பில் வளர்ந்த சமயம் அவர்களிடம் கற்ற நல்லொழுக்கம், மௌலானா நாயகம் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கேடயமாக பயன்பட்டது.

ஏக இறையின் நாட்டப்படி அரபு அஹஆரம்ப கல்வியை கற்க மேலப்பாளையத்தில் தலைசிறந்து விளங்கிய மஃதல் அஸ்பியாஷு என்ற மதரஸாவில் தேர்ந்தார்கள். கற்க வேண்டியதையெல்லாம் கசடற கற்றுத் தேர்ந்தார்கள். அவர்களது பதினேழாம் வயதில் ஆறடியில் திறம்படக் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தாரகள். இச்சிறு பிராயததிலேயேமாதிஹீர் ரஸூல் என்னும் ஷாகிர் என்றும் புகழ்ப் பெயர் பெற்றார்கள். இச்சிறு வயதிலேயே பத்வா என்னும் அரும் பெரும் மாக்கத தீர்ப்புகளும் வழங்கினார்கள்.

மௌலானா நாயகம் அவர்கள் ஆங்கிலம், தமிழ், உர்தூ, பார்ஸி, ஹிந்தி, மலையாளம், முதலாம் வேறு பல மொழிகளயும் கற்று அவற்றில் நாநவன்மையும் பெற்றிருந்தார்கள். இவர்கள் தமிழ், உர்தூ, மொழிகளில் கவிபல பாடியுள்ளார்கள்.

மேலும் சென்னையிலுள்ள பெரம்பூர் மத்ரஸத்துல் ஜமாலியதுல் குஸ்லிய்யா எனும் மாபெரும் அறபிக் கலாசாலையில் முதற்தர மௌலவி பாஸில் என்ற கௌரவப்பட்டம் சூட்டப்பட்டார்கள். மேலும் வட இந்தியா சென்று லாஹூர் பல்கலைக்கழகம் என்ற இஸ்லாமியக் கல்லூரிக்கு சென்றார்கள். அங்கு அவர்களைச் சோதித்த ஆசிரியர்கள் மௌலானா நாயகம் அவர்களின் கல்விப் புலமையைக் கண்டு வியந்து தாங்கள் இங்கு கற்பதற்கு ஒன்றுமில்லை வேண்டுமானால் மத ஆராய்ச்சி தர்க்கக் கல்வி ஆகியவற்றை கற்காலம் என்றார்கள். அதன்படியே அங்க அவற்றையும் திறம்படிவே கற்றுத்தேர்ந்தார்கள். அங்கு அவர்களுக்கு லாஹூர் மௌலவி பாஸில் என்ற சிறப்பு பட்டம் வழங்கப்பட்டது.

பிறகு தேவ்பந்த் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்குள்ள அனைத்த கல்விகளையும் கசடற கற்றுத் தேர்ந்தார்ள். இப்படி பலதரப்பட்ட கல்விகளிலும், கற்றுத் தேர்ந்தபின் 1921ஆம் ஆண்டு தென் இந்தியா திரும்பி இஸ்லாமியத் தொண்டில் அயராது ஈடுபட்டார்கள். பெருமானார் (ஸடல) அவர்களின் சுன்னத்தை பின்பற்ற வேண்டுமென நினைத்த அவர்கள் சீர்காழிக்கு அருகில் உள்ள திருமுல்லைவாசல் என்னும் ஊரில் உள்ள அபூபக்கர் சித்திக் நாயகம் அவர்கள் வம்சத்தில உதித்த சிறப்புமிக்க பாத்திமா பீவி என்ற மாதரசியை மணந்து கொண்டார்கள். இவர்களுக்கு ஜமாலிய்ய ஸய்யித் ஹாமித் மௌலானா அல்ஹாஷிமிய் ஜமாலிய்யா ஸய்யிதா ஜஹ்ரா குறைஷ் கண்ணே ஜமாலிய்யா ஸய்யித் ஹஸ்னா குறைஷ் கண்ணே ஆகியவர்களைத் தவிர மற்ற பிள்ளைகள் சிறுவயதிலேயே இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

தமது அருமை தந்தை நாயகம் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க இலங்கையில் உள்ள வலிப்பட்டி எனும் ஊரில் வாழ்ந்து வந்த அருமை நாயகம் (ஸல்) அவர்களின் வம்சத்தில் உதித்த குதுபுநாயகம் அவர்களின் வழித்தோன்றல் ஆகிய தங்களுக்கு மாமா முறையான அஸ்ஸையித் தாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் அவர்களின் முதலாம் அருமைப் புதல்வி ஸையிதா ஸஹ்ருவான் கண்ணே என்ற சீரோன் மணியை திருமணம் செய்து கொண்டார்கள். மௌலானா நாயகம் அவர்கள் இமாம் ஹஸன் ரலியல்லாஹி அன்ஹி அவர்கள் வழிவந்தவர்கள் அன்னவர்களின் துணைவியார் இமாம் ஹிஸைன் ரலியல்லாஹ் அன்ஹி அவர்களின் வழி தோன்றல் ஆவார்கள்.

இவர்களுக்கு ஜமாலிய்யா ஸய்யித் அலிய் ஜெய்னுல் ஆபிதீன் மௌலானா அல் ஹாஷிமிய் ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹாஷிமிய் ஆகிய இருவரைத் தவிர மற்ற பிள்ளைகள் சிறுவயதிலேயே இறையடிச் சேர்ந்துவிட்டார்கள்.

ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன் மௌலானா அவர்கள் இந்தியாவில் மணம் முடித்த ஸித்திக்கி வம்சத்தில் பிறந்த அன்னை பாத்திமா அவர்களுக்குப் பிறந்த ஆண்பிள்ளை ஜமாலிய்யா ஸய்யித் ஹாமித் மௌலானான அல் ஹாதிமிய் அவரகளை சிறுபிராயத்திலேயே இலங்கைக்கு அளைத்து வந்து விட்டார்கள்இவர்களையும் தம் பிள்ளைபோல் வறர்த்து ஆளாக்கியவர்கள் அன்னை ஸஹர்வான் அவர்களேயாகும்.

இம் மூவருக்கும் புகாரி மதரஸாவின் முதல்வர் கல்விக் கடல் புகழ்பெற்ற ஜக்கரிய்யா ஆலம் அவர்களின் மூன்று புதல்வியர்களையும் மணமுடித்து

வைத்தார்கள். இவர்கள் பிள்ளைகள் இன்றும் வெலிகமா என்ற சிறுமக்கம் என்று புகழ் பெற்ற ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களே தற்போது ஸய்யித் வம்சத்தில் குதுபுநாயகம் அவர்களின் வழித்தோன்றலில் வாழும் ஒரே குடும்பமாகும்.

இலங்கையில் ஜமாலிய்ய ஸய்யித் யாஸீன் மௌலானா அல் ஹாஷிமிய் நாயகம் அவர்களுக்கும் அன்னை ஸய்யிதா ஸஹர்வான் குரைஷி கண்ணே அம்மையாருக்கும் பிறந்த ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அக்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யி நாயகம் அவர்களே எங்கள் உயிருக்கும் உயிரான சர்குரு ஷெய்குநாயகம் ஆவார்கள்.

இவர்கள் சிறுவயது முதலே நல்ல புத்தி கூர்மையும், மற்றவரகளை கவரும் முக வசீகரமும் பெற்றிருந்தார்கள். இவர்கள் வலிகமவில் உள்ள அறபா தேசிய பாடசலையில் தங்களின் தொடக்கக கல்வியை கற்க தொடங்கினர்கள். இவர்கள ஆரம்பததில் அப்பள்ளிக்கு அழைத்துப் போனது தற்போது நமது சற்குரு ஷெய்கு நாயகம் அவர்களின் மூன்றாவது மருமகர் செய்யிது ஜாவிது அலவி மௌலானா அர்களின் தாய்மாமா செய்யிது யஸீன் மௌலானா ஆவார்கள். அந்நேரம் நமது அருமை சற்குரு ஷெய்கு நாயகம் அவர்களின் அருமைத் தந்தையார் ஜமாலிய்யா செய்யிதுயாஸீன் மௌலானா ஹஸனிய்யுல் அல் ஹாஷிமிய் நாயகம் அவரகள் வெலிகம என்னும் ஊருக்கு அருகாமையிலிருந்த வலிப்பட்டி என்னும் குக்கிராமத்தல் வாழ்ந்து வந்தார்கள். *(வரலாறு வளரும்)*

---

**குத்புகள் திலகம் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் நாயகம் (ரலி) நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் தங்கள் தந்தை நாயகத்தைப் போற்றி..**

ஈழத் தரசிற் பெரியோரும் — இனிய கலைபல கற்றோரும்
சூழ விருந்த மாந்தரெலாம் — தூதர் நபியின் பேரர்க்கு
தாழப் பணிந்தே புகழ்ந்தேத்தி — தனிநிக ரற்றவ ரெனப் போற்றித்
தோழமை கொண்டோர் பலப்பலரே — தூயோ னீந்த பேறதுவே.

மதபோ தனைகட் பல செய்தார் — மறைவழி நடக்கத் துணைநின்றார்
துதிகொ ணபிக ளார்மொழிகள் — துணிவுட னேற்க வழி செய்தார்
கதியாய் நின்றே சமுகத்திற் — கரும்பணி யாற்றிச் சீருறுத்தி
வதியுந் நல்வழி வகுத்தாரே — மதிகொ ளெந்தம் பெரியாரே.

# பிறந்த நாள் வாழ்த்து!

இன்று பிறந்த நாள் (ஆங்கிலத் தேதிக் கணக்கின் அடிப்படையில்) காணும் எனது மூத்த மகன் ஏ.எம். முஹம்மது அப்துல் ரஹ்மான் பி.பி.ஏ. பி.ஜி.டி.சி.ஏ. ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்...

ஏக இறைவன் அல்லாஹ்வின் அருளோடு நீதி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருணைமிக்க ஆசியோடு அஹ்லே பைத்துகளின் முத்து எங்கள் ஷைகு நாயகம் அவர்களின் ஆசியோடு, சீரோடும் சிறப்போடும் வாழ இறைவா உன்னிடம் இறைஞ்சுகிறேன்.

ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி மூங்கில்போல் சுற்றம் முழுமையாய்ச் சூழ வாழையடி வாழையாய் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!

**பதினாறு வகையான செல்வங்கள்:**

1. கலையாத கல்வி. (வெற்றிக்கு வழிகாட்டக்கூடிய கல்வி)
2. குறையாத வயது (நீண்ட ஆயுள்)
3. கபடு வராத நட்பு (நம்பிக்கையான நல்ல நண்பர்கள்)
4. குன்றாத வளமை (வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்)
5. குன்றாத இளமை (உழைப்புக்குத் தளராத உடல் வலிமை)
6. கழுபிணி இல்லா உடல் (நோயற்ற வாழ்க்கை)
7. சலியாத மனம் (கலங்காத மனத்திண்மை)
8. அன்பகலாத மனைவி (மாறாத அன்பைச் செலுத்தும் மனைவி)
9. தவறாத சந்தானம் (அறிவு, ஆற்றல், ஒழுக்கம், ஆயுள் இவற்றில் தவறிவிடாத குழந்தைகள்)
10. தாழாத கீர்த்தி (மேன்மேலும் வளரக்கூடிய பொருளும் புகழும்)
11. மாறாத வார்த்தை (வாய்மை)
12. தடைகள் வராத கொடை (இல்லையென்று சொல்லாத உதவி)
13. தொலையாத நிதியம் (சிக்கனம் சேமிப்புப் பழக்கம்)
14. கோணாத கோல் (நேர்மையும் திறமையும் கொண்ட குடும்ப/ அலுவலக அரசியல் நிர்வாகம்)
15. உதவி பெரிய தொண்டரோடு கூட்டு (நன்மக்கள் பெருமக்களோடு தொடர்பு)
16. துய்ய நின் பாதத்தில் அன்பு (இறை நம்பிக்கை) ஈமான்.

மகன் முஹம்மது அப்துல் ரஹ்மான் அவர்கள் தொண்டு பல செய்து செயற்கரிய செயல் பல செய்து பல்லாண்டு பல நூறாண்டு இறைவனின் திருப்பொருத்தத்தை எல்லா நிலைகளிலும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

**வாழ்த்தும் இதயங்கள்....**

**அத்தா, அம்மா, அக்காள், தம்பி, மாமா, மாமி, மற்றும் குடும்பத்தார்கள், நண்பர்கள், ஆன்மீக ஆத்மீக சகோதரர்கள்.**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# நிக்காஹ் (எ) திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அல்லாஹ்வின் பேரருளாலும் அருமை நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும் அவர்களின் திருப்பேரர் **குத்புஸ்ஸமான் ஷம்ஷூல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும், அவர்களின் அருள் பேரர் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அவர்களின் அன்பாசியாலும்** நிகழும் **ஹிஜ்ரி 1445 ஆம் ஆண்டு துல்கஃதா மாதம் பிறை 4 (13.05.2024)திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு முபாரக்கான நல்வேளையில்**

---

ம.மு.கோவிலூர். நாட்டாண்மை (மர்ஹூம்) P.M.S.அப்துல் ரஹீம் &.நாட்டாண்மை (மர்ஹூம்) P.M.S.A. சையது முஹம்மது அவர்களின் மகன்வழிப் பேத்தியும், திண்டுக்கல் (மர்ஹூம்) ஹாஜி. S.M. ஜமால்முஹம்மது அவர்களின் மகள்வழிப் பேத்தியும், திருச்சி.ஜனாப். S. யாஸின் அவர்களின் மகளுமாகிய தீன்குலச்செல்வி

**Y. நவ்ரின் ஜுமானா BCA., MBA.,** ஹக்கிய்யுல் காதிரி **மணமகளுக்கும்**

இளங்காக் குறிச்சி. மர்ஹூம். K.K. சையதுஅலி அவர்களின் மகன்வழிப் பேரனும், வேல்வார்கோட்டை(தும்கூர்) (மர்ஹூம்) ஹாஜி. S.K. முகமது அனிபா அவர்களின் மகள்வழிப் பேரனும், ஜனாப். K.S. முகமது பாரூக் அவர்களின் மகனுமாகிய தீன்குலச் செல்வன் .

**M. அப்துல் மன்னான் M.Com., பிலாலி மணமகனுக்கும்**

**Multitrans Logistics LLC- Dubai**

---

இன்ஷாஅல்லாஹ் (திருமணம்) செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருச்சி, மன்னார்புரம், காஜா நகர், **V.S.M, இப்ராஹீம் மஹாலில்** நடைபெறும் நிக்காஹ் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்திலும் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணக்களை வாழ்த்தி துஆ செய்யுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்புடன் அழைக்கும்**

**K.S.முகம்மது பாரூக்**
**Er.M.ஆசிப் முகம்மது,B.E.,**
**Er.M. தாஜுல் காதர்,B.E.,**
3/1077, KAM நகர். NGO. காலனி,
திண்டுக்கல்.
செல்: 8883145132

**S. யாஸின், DFD., ஹக்கிய்யுல் காதிரி**
Prop. Jessy Apperals & Textiles,
Secretary, Egathuva Maigana Sabai,
Treasurer, tahir Nagar Muslim Jamath
கருமண்டபம், திருச்சி. செல்: 9443148148

புனித தர்பார் ஷரீஃபில்,

சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்

# ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா

அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் **89ஆம் புனித உதயதின விழா நிகழ்ச்சி!**

சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்** அவர்களின் **புனித 89ஆவது உதய தின மஜ்லிஸ்,** திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பாக, அதி சங்கைக்குரிய தர்பார் ஷரீபில், சென்ற (25.04.2024 வியாழக்கிழமை) மாலை மஃரிபுக்குப் பிறகு வெகுசிறப்பாக நடைபெற்றது.

புனித ராத்திபத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா, கஸீதத்துல் அஹ்மதிய்யா மற்றும் கஸீதத்துல் அவ்னிய்யா ஆகியவை விமரிசையாக ஓதப்பட்டன. மதுரஸா பேராசிரியர் மௌலவி என். முஹம்மது ரபீஉத்தீன் ஆலிம் நூரி ஹக்கிய்யுல் காதிரிய் **வஸீலத்துல் குப்ரா** துஆ ஓத, மதுரஸா நாழிர் ஹள்ரத் மௌலவி. என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் **ராத்திபு துஆ** ஓதினார்கள். மஜ்லிசுகளுக்குப் பிறகு, மதுக்கூர் முஹம்மது தாவூது ஹக்கிய்யுல் காதிரிய், பெரம்பலூர் முபாரக் அலி ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் **மெய்ஞ்ஞான கீதங்கள்** பாடினார்கள்.

பருவநிலை மாற்றம் காரணமாக, நாளுக்கு நாள் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கடுமையான வெயில் அதிகரித்து வருவதை முன்னிட்டு, வெப்பம் தணிந்து மழை பெய்து மண் குளிர வேண்டி, சங்கைக்குரிய வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் யாத்தளித்த **மழை வேண்டிப் பாடும் பைத்**-பாடலை மதுக்கூர் முஹம்மது தாவூது ஹக்கிய்யுல் காதிரிய் மற்றும் திருச்சி அ. நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் சேர்ந்து பாட, அனைவரும் மழைவேண்டி இறைஞ்சினர்.

நிகழ்ச்சியில், திருச்சி கலீபா. எம். சிராஜுத்தீன், மதுரஸா பேராசிரியர்கள், யாஸீனிய் மௌலவிமார்கள், மதுரஸா மாணவர்கள், திருச்சி, பெரம்பலூர், ஈரோடு, மதுக்கூர், மேலத்திருப்பந்துருத்தி உள்ளிட்ட ஊர்களிலிருந்து முரீதீன்கள், முஹிப்பீன்கள், அஹ்பாபுகள் என ஆண்களும் பெண்களுமாக நூற்றுக்கும் மேற்பட்டோர் திரளாகக் கலந்து கொண்டு மஜ்லிஸைச் சிறப்பித்துச் சிறப்புற்றனர்.நிறைவாக, கலந்து கொண்ட அனைவருக்கும் தப்ரூக் சீரணியும் இரவு கந்தூரி உணவும் பகிரப்பட்டன. இரவு உணவுக்கான ஏற்பாடுகளை, மேலத்திருப்பந்துருத்தி மர்ஹூம் ஷேக் அலாவுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் பெயரில், அவர்தம் குடும்பத்தார் சிறப்பாகச் செய்திருந்தனர். அல்ஹம்துலில்லாஹ்.

ஆங்கிலத் தேதிப்படி, சங்கைக்குரிய வாப்பா நாயகம் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்** அவர்களின் புனித உதயதினமும் – ஹிஜ்ரி கணக்கின்படி, சங்கைக்குரிய ஷைகு நாயகம் **குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்** அவர்களின் புனித உதயதினமும் சங்கமிக்கும் பொன்னான இந்நன்னாளின் பொருட்டால்... நம் அனைவரது நாட்டதேட்டங்கள் அனைத்தும் நிறைவேறவும், நமக்கும் நம் பிள்ளைகளுக்கும், நம் சந்ததிகளுக்கும் பேரன்பையும் பேரருளையும் என்றென்றும் வாரி வழங்கிடவும், அன்பு, அமைதி, அருள் எங்கும் பரவி, பிரபஞ்சம் எங்கும் பிறபஞ்சம் நீங்கி வளம் கொழிக்கவும், ...சங்கைக்குரிய வாப்பா நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்களும் அவர்கள் தம் திருக்குடும்பத்தாரும் பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ்ந்து வளமருளப் பிரார்த்தித்த வண்ணம் விடைபெற்றோம். ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

## சங்கைமிகு திருப்பேரரின் திரு உதயதின மஜ்லிஸ்

சென்ற (30.04.2024) செவ்வாய்க்கிழமை மாலை மஃரிப் தொழுகைக்குப் பிறகு, நமது உயிரினும் மேலான சங்கைக்குரிய ஷைகுநாயகம் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் புனித உதயதின விழா மஜ்லிஸ் திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பில், கலீபா. M. சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் இல்லத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கலீபா. M. சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் மற்றும் வைத்தியர் அப்துல் மாலிக் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் மேன்மை குறித்து சிறப்புரையாற்றினார். ஜனாப். நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய் மற்றும் மௌலவி பீர் முஹம்மது ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அவர்கள் மீது புகழ்ப்பா பாடினார்கள். நிகழ்ச்சியில், முரீதீன்கள் முஹிப்பீன்கள், யாஸீனிய் மௌலவிமார்கள் திரளாகக் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி மற்றும் கந்தூரி உணவுக்கான ஏற்பாடுகளை, கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் அவர்கள் செய்துள்ளார்கள்.

புனித ஷவ்வால் மாதத்தின் முத்தான மூன்றாம் பெருநாளான சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் உதய தினத்தில், ஒரே உள்ளமை என்னும் உயர் மெய்ஞ்ஞானம் உலகில் ஓங்கித் தழைக்கவும் நமக்கும் நமது சந்ததிகளுக்கும் உலக உயிர்கள் அனைத்திற்கும் பேரன்பையும் பேரருளையும் தந்து காக்கவும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களும் அவர்கள் தம் திருக்குடும்பத்தாரும் நூற்றாண்டு கடந்து நீடுழி வாழப் பிரார்த்திக்கப்பட்டது. (தகவல் : அ.நை.மு. அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.)

# தொடரும் முஹம்மதிய்யத் தலைமைகள். இத்ரத்தீ

ஏ.என்.எம். முகம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரிய் – கத்தார்

உலகங்கள் தோன்றி, அதில் உயிர்கள் வாழ எல்லா வசதிகளும் உருவாகி பின்பு உயிரினங்களும், மனித இனங்களும் வெளியாயின. உலகிலுள்ள எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் மனிதனுக்கே இறைவன் தந்து, தன்னை உணரும் ஆற்றலையும் தந்தான். இந்த உலகத்தின் பெருமைகள் செல்வங்கள் எல்லாம் மனிதனைக் கொண்டே மதிப்புமிக்கதாயது. ஆனால் மனிதன் பிரபஞ்சத்தின் உண்மைத் தன்மைகளை அறியாது தனக்குத்தானே தீங்கிழைத்துத் தன்னோடு வாழும் சக மனிதனுக்கும் தீங்கு செய்பவனாக மாறினான். எனவேதான் பிரபஞ்சம் எந்த நோக்கில் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் வெளியாக்கி இருக்கிறது என்ற நிலையை விளக்கவே தன்னிடமிருந்து தீர்க்கதரிசிகளை இறைவன் அனுப்பி, மனிதன் தன் உண்மை நிலையை அறியவும், தான் இந்த உலகில் வெளியான நோக்கத்தைத் தெளிவுபடுத்தி ஓர் ஒற்றுமைமிக்க சமூகமாக உருவாகும் வழியை மார்க்கமாக ஏற்படுத்தித் தந்தான். அந்த அந்தக் காலங்களில் வந்த தீர்க்கதரிசிகள் அமைத்து அவர்கள் வாழ்ந்த வழிதான் மனிதர்கள் பின்பற்றி வாழ்ந்து தன்னுடைய உண்மையை அறிந்து, தான் வெளியான நோக்கத்தை அறிந்து சக மனிதருடன் அன்போடு வாழும் மதங்களாக உருவானது.

எல்லாத் தீர்க்கதரிசிகளும் ஒரே உண்மையில் இருந்து ஒரே உண்மையின் உள்ளமையை (வஹ்தத்துல வுஜூதைக்) காட்டித் தர வந்தவர்களே. இவர்களைத் தான் தீர்க்கதரிசிகள், மகான்கள், நபிமார்கள், குத்புமார்கள், அவ்லியாக்கள் எனவும் போற்றப்பட்டு அவர்கள் காட்டித்தந்த வழியிலே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே நம்முடைய உண்மையை மறந்து எந்த மதம் பெரிது என்று போட்டி போட்டுக் கொள்வதிலும், இறைவனைத் தொழும் ஆலயங்களில் தங்களுக்குள் முட்டிக் கொள்வதி லும் ஒருவர் மற்றவர்களின் மதங்களை ஏசித்திரிவதிலும், வீணே காலத்தை அழித்து இறுதியில் சென்று சேர வேண்டிய இறைவனின் இடத்தை அறியாது பாழும் நரகில் வேகின்றனர். ஆனால் நபிமார்களின் மகான்களின் குத்புமார்களின், வலிமார்களின் உயர்வை அறிந்தவர்கள், அவர்களோடு பயணித்து அவர்களின் போதனையைத் தங்கள் வாழ்வாக ஆக்கிக் கொண்டு அதன்மூலம் இவ்வுலக வாழ்வில் இன்பத்தையும் இறந்தபிறகு இறைவனின் சன்னிதானத்தை எந்தத் தடங்கலும் இன்றிச் சேர்ந்து நித்திய ஜீவிகளாக வாழ்கிறார்கள்.

இந்த நூற்றாண்டுக்கும் நாமே, இனிவரும் நூற்றாண்டுகளும் எமது பார்வையிலே என முழங்கி மனித நேயத்தை வாழ வைக்க எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பூரண உள்ரங்க வெளிரங்க வாரிசாகவும் அன்னவர்கள் தந்த இஸ்லாமிய சாதி மத பேதமற்ற ஒற்றுமை மிக்க வாழ்வை இந்த உலகில் ஏற்படுத்தி எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உயிருக்கு மேலாக மதித்து அவர்களின் புனிதக் குடும்பத்தினரை அன்பு கொண்டு நேசித்து அவர்களின் புனித வழியாம் இஸ்லாத்தில் மனிதர்களை வாழவைக்க இந்த நூற்றாண்டின் நாயகராக

குத்புஸ்ஸமானாக ஹக்குல் முபீனாக ஹக்கிலிருந்து உதயமானவர்கள்தாம் நம் ஆருயிர் செய்கு நாயகம் செய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் வாப்பா நாயகம் (ரலி) அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அன்னவர்கள். இறந்து,மரணித்த இதயங்களை உயிர்ப்பிக்கவே என்னை இப் பூவுலகிற்கு அனுப்பினான் என்றும், எங்கும் பரிபூரண ஹக்கின் திருநாமம் அறிந்து போற்றப்படவேண்டும் என்பதே தங்களின் உயர் நோக்கமாய்க் கொண்டு, தங்களின் வாழ்வை இறைவனுக்காக தியாகம் செய்து, தனது குடும்பத்தார்களை அதே போல் இறையின் தியாகிகளாக வாழவைத்து, எங்கும் எப்போதும் நினைவிலும், உறக்கத்திலும், பேச்சிலும், எழுத்திலும், மூச்சிலும் வஹ்தத்துல் வுஜுது என்னும் ஏக இறை உள்ளமையை உலகிற்குச் சொல்லி, பிரபஞ்சத்தை ஓர் உடலாகக் கொண்டு வாழ்ந்து இப்போது தன் பூவுடல் மறைத்து நித்திய ஜீவனாய் ஹக்குடன் இருப்பவர்கள் தான் நமது ஆருயிர் செய்கு நாயகம்.

அவர்களுடைய வாழ்விலே எத்துணை கஷ்டங்கள் துன்பங்கள், தொல்லைகள் வந்தாலும் வஹ்தத்துல் வுஜுது என்ற உண்மையைப் பற்றி மட்டுமே பேசி, தான் வந்த நோக்கத்திலிருந்து சிறிதும் மாறாதவர்கள். இவர்களுடைய காலத்தில் தான் எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இழிவு படுத்தி மௌலிதுகள், கந்தூரிகள் கூடாது என்று இஸ்லாமியப் பெயர் தாங்கிகள் தீவிரப்பிரச்சாரம் செய்தாலும் எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுதினமும் புகழ்வோம், அவர்களை உயிருக்கு மேல் நேசித்து அவர்கள் மீது குர்ஆன் வாக்குப்படி ஸலவாத் ஓதி மௌலிதுகள் ஓதுவோம் என்று இறைப் பொருத்தத்துடன் தன்னோடு உள்ள மக்களைத் தயார் செய்து உலகத்திலுள்ள தனது சீடர்களைக் கொண்டு உலகம் முழுவதும் மீலாது விழாக்களை செம்மைப்படுத்தி ரபீஉல் அவ்வல் மாதம் முழுவதும் மௌலிது மஜ்லிஸ் நடத்தி, கந்தூரி கொடுக்கவைத்து, உலகிலுள்ள தமது சீடர்களை இலங்கை வெலிகாமத்திற்கு அழைத்து, தங்களுடைய இடத்திலே உள்ளூர் மக்களையும் சேர்த்து மீலாது விழா எவ்வாறு சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று தாங்களே முன்நின்று பல வருடங்களாய் உலகிற்கே முன்மாதிரியாய் நடத்திக் காட்டுபவர்கள். இன்று அவர்கள் விரும்பியதுபோல் உலகம் முழுவதும் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித மௌலிது ஷரீபும், மீலாது விழாக்களும் கொண்டாடப்பட்டு, எங்கும் கந்தூரிகள் சிறப்பாக நடத்தி இஸ்லாத்தின் ஆணிவேராம் வஹ்தத்துல்வுஜுதின் உண்மையாகிய அண்ணலாரின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) புகழைச் செழிக்க வைத்துள்ளார்கள், இவர்களின் இந்த முயற்சி இல்லையேல் தமிழகம் வேறு ஒரு மார்க்க வழியில் நடந்து செல்லவேண்டிய சூழல் உண்டாகி இருக்கும். அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் இவர்களைக் கொண்டு நம்மைக் காப்பாற்றினான்.

எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்ப்பவர்கள் ஐஸ்கிரீம் போன்றவர்கள், வெகுசீக்கிரத்தில் ஐஸ்கிரீம் போல மறைவார்கள் என்று கூறி தங்களின் விடாமுயற்சியினால் மௌலிது, மீலாது, கந்தூரிகளை நடத்திய வண்ணமாகவே இருக்கிறார்கள். எதிர்த்தவர்கள் இன்று பல கூட்டங்களாக தங்களுக்குள் பிரிந்து தங்களுக்குள்ளேயே ஒவ்வொருவரும் தாக்கி விமர்சித்து கீழான நிலைக்குச் சென்றுவிட்டார்கள்.

இஸ்லாத்தின் முதல் கடமையான கலிமா வாகிய லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வை விளங்கினால் மட்டுமே இறைவனையும் நாம் வாழும் இந்த பிரபஞ்சத்தையும், நம்முடைய உண்மையையும் ஒரு சேர உணர முடியும் என்று உணர்த்தி அதை எப்போதும் விளக்கி சொல்லிக் கொண்டே இருப்பவர்கள். மார்க்கத்தின் முதல் கடமை அல்லாஹ்வை அறிவது என்ற நபிமொழிக்கு ஏற்ப முதலில் அல்லாஹ்வை அறிவதன் மூலம் மற்ற கடமைகளாகிய தொழுகை நோன்பு ஜக்காத் ஹஜ் ஆகிய கடமைகளை சரியாக இறைவனுக்காகச் செய்யமுடியும் என வலியுறுத்தி அதை எப்போதும் தங்களின் பிரச்சாரத்தின் வாயிலாகவும், தங்களுடைய புத்தகத்தின் வாயிலாகவும் உலகிற்கு உரக்க சொல்லித் தருபவர்கள்.

இறைவனே இம்முழு பிரபஞ்சமாய் விரிந்து முழு சக்தியாய், பிரிக்க இயலாதவனாய், இணையில்லாதவனாய் இருக்கிறான். நாமும் அதன் பகுதியே என்று நம்மை இறையிலிருந்து பிரித்துப் பார்க்கும் ஷிர்க்குத் தன்மையை அறவே நீக்கி வைப்பவர்கள். நாம் செய்யும் செயல்கள் யாவும் இறைவனின் உதவி கொண்டே என்பதால் அனைத்தின் இயக்கமும் பரிபூரண இறையின் செயலே என்று உணரவும், நம்மை நம்முடைய பிடரி நரம்பின் சமீபமாக இருந்து நம்மை இயக்குகிறான், கவனிக்கிறான் எனவும், எனவே நம்முடைய எண்ணங்கள் செயல்கள் யாவும் எப்போதும் தூய்மையானதாய் இருக்கவேண்டும் என வலியுறுத்தி மக்களை கபடவேடமில்லாமல் இயற்கையின் வழியிலே, நன் மக்களாய் முயற்சி உடையவர்களாய், திறன் மிக்கவர்களாய், பரிபூரண சக்தியைக் கொண்டு இயங்குபவர்களாய் சாதனையாளர்களாய் உலகில் பரிணமிக்க வழி காட்டுபவர்கள்.

உலகத்தில் மக்கள் செய்துவரும் கேடுகளினால் தாங்களே தங்களுக்குத் தீங்கிழைத்துக் கொள்ளும் தன்மையை நீக்க, வஹ்தத்துல் வுஜூது நிலை மட்டுமே உதவ முடியும் என்று எதை நம் உயிரினும் மேலான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்து அதைத் தொடர்ந்து தங்களின் அஹ்லுல் பைத்துக்கள் மூலம் இந்த உலகில் இஸ்லாமாய் நிலை நிறுத்தியுள்ளார்களோ அதே வழியில் நம்மை வழிநடத்துபவர்களே நம் ஆருயிர் செய்கு நாயகம் (ரலி) அவர்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எப்படி நமக்கு முன் வந்த நபிமார்களை உண்மைப் படுத்தினார்களோ அதேபோல் ஆருயிர் செய்கு நாயகம் தமக்கு முன்பு வாழ்ந்த தம் காலத்தில் வாழும் மகான்களையம் உண்மைப் படுத்தி வைத்தார்கள். அது மட்டுமல்லாமல் தன்னுடைய தாய் மொழியான தமிழுக்கும் தங்களின் பாட்டனாரின் மொழியாகிய அரபியையும் இணைத்து பல மொழி பெயர்ப்புகளையும் இந்த உலகத்திற்கு வழங்கி மொழி வேறாக இருந்தாலும் சொல்லும் உண்மை வஹ்தத்துல் வுஜூதுதான் என்பதை மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் விதமாக அவர்களின் செயல்பாடுகள் இருந்த வண்ணமாகவே உள்ளது.

முன்னைய குத்புமார்கள் மகான்கள் அவ்லியாக்களின் அரபு மற்றும் முந்தைய தமிழ் நூல்களை எளிமைப்படுத்தி தமிழில் இவை சொல்வதும் வஹ்தத்துல் வுஜூது என்னும் ஒரே உள்ளமைதான் என்றும் நிரூபித்துள்ளார்கள். மேலும் இறைவனின் உண்மை, எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அருமைப் புதல்வியான அன்னை பாத்திமா (ரலி) ஆகியோரின் சிறப்புகளை, மகத்துவங்களை தன்னுடைய எளிமையான உயர் தமிழ் நடை மூலம் பல ஆக்கங்களை வெளியிட்டு உலக மக்களுக்கு பல அரிய கருவூலங்களைத் தந்துள்ளார்கள். தங்களுடைய தாய் மொழியை அதன் தொன்மையை, சிறப்பை வளத்தை,கலாச்சாரத்தைப் போற்றும் வண்ணமாக தமிழில் பல அழகிய நூல்களும் கவிதைகளும் சித்திரக்கவிகளும் இயற்றி, தமிழில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர்கள் கூட வியக்கும் வண்ணம் தமிழ் மொழிக்கு நன்றிக்கடன் செலுத்தி, தமிழ் சமுதாயம் உயர வழிவகுத்து தன்னால் இயன்ற தமிழ்ச்சேவைகளை உலகிற்கு அளித்துள்ளார்கள்.

வஹ்தத்துல் வுஜூது என்னும் ஒரே உள்ளமையில் எப்படி இறைவனும் மனிதனும் பின்னிப் பிணைந்து பார்க்க முடியும் வண்ணம் இலங்குகிறார்கள் என்பதை, எளிய அழகு தமிழ் மூலம் தாகிபிரபம் என்னும் உயர்நூலை ஞானத்தைத் தேடி அலையும் மக்களுக்காகவே உண்டாக்கி அது ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்பாகி மனிதனின் முழு சக்தியையும் அறிந்து செயல்பட தூண்டுகோலாய் அமைத்துள்ளார்கள்.

அருள் மொழிக்கோவை என்றும் அவர்களுடைய சொல் செயல் நடைமுறைகள் அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ் கிரந்தங்களுக்கு தமிழ் விளக்கம் போல் அமைந்து வஹ்தத்துல் வுஜூத் என்னும் உண்மை ஒரே வகைளான சீரான சொல், செயல் நடைமுறையையே தரும் என்பதை உறுதியாக்கும் சான்றாக அமைந்துள்ளது.

தங்களுடைய சீடர்களை ஒன்று படுத்தி வஹ்தத்துல் வுஜூது என்றும் இஸ்லாமிய அடிப்படை உண்மை மறைந்தும், மறந்தும் போகாதவாறு ஏகத்துவ மெய்ஞான சபை என்னும் உயர் அமைப்பு யுக நாள் முடிவு வரையிலும் செயல்படும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, வஹ்தத்துல் வுஜூது உண்மையை ஏகத்துவ மெய்ஞான தமிழ்ச்சங்கம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் தமிழ்த் தொண்டாற்றி நிலைநிறுத்த அருளியுள்ளார்கள். மேலும் ஞானம் என்னும் உயர் அறிவை பறைசாற்றிக் கொண்டே இருக்க மறை ஞானப் பேழை என்னும் மாத இதழை ஏற்படுத்தி அதன் மூலம் அருந்தொண்டாற்றி வருகிறார்கள்.அதுமட்டுமல்ல வஹ்தத்துல் வுஜூது உண்மையை ஏகத்துவ மெய்ஞ்ஞான சங்கம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் தமிழ்த் தொண்டாற்றி நிலை நிறுத்த அருளியுள்ளாகள். மேலும் ஞானம் எனும் உயர் அறிவை பறைசாற்றிக் கொண்டே இருக்க மறைஞானப் பேழை எனும் மாத இதழை ஏற்படுத்தி அதன் மூலம் தொண்டாற்றி வருகிறார்கள். வஹ்தத்துல் வுஜூது என்னும் இஸ்லாமிய உயர்ஞானம் எவ்வாறு குர்ஆனிலும், ஹதீஸிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் திருக் குடும்பத்தினர் ஸஹாபாக்கள், குத்புமார்கள், மகான்கள், அவ்லியாக்கள் வாழ்வில் நிறைந்துள்ளதை முறையாகக் கற்று அதை ஆதாரத்துடன் ஆணித்தரமாக இந்த உலகிற்கு தொடர்ந்து தந்து கொண்டே இருக்கும் வண்ணம் மதரஸத்துல் ஹஸனைன் பீ ஜாமியா யாஸீன் என்ற மதரஸாவை நிறுவி அதன் மூலம் உயர்தரமான ஆலிம் பெருமக்களை உருவாக்கி வருகிறார்கள்.

வஹ்தத்துல் வுஜூது என்னும் ஓரிறை உண்மையை தானும் அறிந்து வாழ்ந்து, தன்னைச் சேர்ந்த தன் திருக்குடும்பத்தார்களையும் வாழவைத்து, தன்னுடைய சீடர்களுக்கும் போதித்து வாழவைத்து தங்களுடைய மதரஸாவில் இருக்கும் ஆலிம் பெருமக்கள் அந்த மதரஸா மூலம் உருவாகும் ஆலிம் பெருமக்களையும் அதே நிலையில் உயர்த்தி இதன்மூலம் உலக மக்களுக்கு இந்த உண்மையைப் பறை சாற்றி வருவதன் மூலமே ஓர் ஒற்றுமையான ஷிர்க் அற்ற வலிமையான, திறமையான, உயர் சமூகத்தை வடிவமைக்க முடியும் என்று உணர்ந்து அதைச் செயலாற்றலுடன், வெளிப்படுத்தி வரும் அன்னவர்களின் தியாக வாழ்வுதான் உண்மையான இறையச்ச வாழ்வு என்பதை நிரூபித்துள்ளார்கள்.

இறை உண்மையை அறியாது, வெறும்போதனை மூலம் மட்டுமே உலகில் சரீஅத் சட்டம் முறையாகப் பின்பற்ற முடியாது என்பதை உணர்ந்தே எல்லா நபிமார்களும், மகான்களும், குத்புமார்களும், அவ்லியாமார்களும் இந்த நிலையில் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பவர்கள். இவர்கள் யாரையும் எதிர்ப்பவர்கள் அறியாதவர்களாகவும், இணைவைப்பவர்களாகவும், வெறும் கபட வேடதாரிகளாகவும் மட்டுமே உள்ளனர் என்பதை ஆருயிர் சங்கைமிகு செய்கு நாயகத்தின் உயர் போதனைகள் மூலம் அறிய முடிகிறது.

மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வேறுபாடு நாம் பெற்ற சிந்தனையே. இந்த சிந்தனை மூலமே இறைவனை அறிந்து அவனின் சக்திகளைப் பெற்று உயர்வாழ்வு வாழ்ந்து நித்திய ஜீவனாய் என்றும் பரிணமிக்க முடியும் என்று வாழ்ந்து காட்டும் தத்துவஞானிதான் நம் ஆருயிர் செய்கு நாயகம் அவர்கள். நமக்கும் அந்த வழியே பாபமற்ற நற்கருமங்களை செய்து இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்கிறது.

மரத்திலுள்ள இலையை மட்டும் நினைப்பதால் அந்த மரத்தின் இலையளவுள்ள சக்திமட்டுமே பெற முடியும், ஆனால் மரத்தை முழுமையாக சிந்தித்தால் மரத்தின் முழு சக்தியையும் பெற முடியும் என்பதாலும், மரம் என்றுமே, இலை, காம்பு, கொப்பு, வேர்கள் எல்லாம் சேர்ந்த ஒன்று தானே, எனவே இலையை மட்டும் மரமாக எப்படிக் கூற முடியும் எப்படி நினைக்க முடியும் என்று கூறி, இறைவனும் அப்படித்தான் பிரபஞ்சம் முழுமை எனவே முழுமையை சிந்தித்து முழுமையாகிய இறைவனின் சக்தியைப் பெறுவோம் என்று கூறும் நம் சற்குரு நாதர் அவர்கள் சக்தியின் முழுமையாகி இறைவனிலே என்றும் பயணிப்பவர்கள்.

அவர்களின் வாழ்வு கருவிலே திருவானது. இப்படிபட்டவர்கள் தாங்கள் யார் என்பதை அறிந்து தன்னுடைய பணி என்ன என்பதைத் தீர்மானித்து அதைச் செய்து முடிக்கும் வரை, ஊண், உறக்கம், உறவு என்பதெல்லாம் இந்தக் கடமைக்காகவே என்று உலகில் வாழ்ந்து, அப்போது இதற்கு ஆதரவாக இருப்பவர்களை இணைத்து, தான் நினைக்கும் பணிகளை செவ்வனே இவ்வுலகில் நிகழ்த்தி அதை எதிர்க்கும் யாரையும் வலுவாக எதிர்த்து, அப்படிப்பட்டவர்களை புறந்தள்ளி தன்னுடைய இலக்கை நிறைவேற்றிக் கொண்டே செல்பவர்கள். எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித இலட்சியத்தில் பயணத்தில் பங்கு பெற்றவர்களான, ஸஹாபாக்கள் நல்லவர்கள். சரித்திரத்தில் இன்றும் எப்படி நினைவு படுத்தப்பட்டு அவர்களை கண்ணியப்படுத்துவோமோ அதுபோல் இந்த உண்மையை வழிவழியாகத் தொடர்ந்து நடத்தும் அண்ணல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்குடும்ப வாரிசாகிய நமது ஆருயிர் செய்குநாயகம் அவர்கள் இந்த இஸ்லாமிய வஹ்தத்துல் வுஜூதை நிலை நிறுத்தும் உயர் பணியில் பங்கு எடுத்துக் கொள்ளும் அவர்களுடைய குடும்பங்கள் சீடர்கள் நல்லவர்கள். அனைவரும் அவர்களின் வாழ்க்கையோடு ஒட்டிய சரித்திரத்தில் மங்கா இடம் பெற்று அன்னார்களை நினைவு கூறும் எல்லா இடங்களிலும் இவர்களும் நினைவு கூரப்படும் நற்பேறு பெறுவார்கள் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை.

எனவே , நாம் நம் ஆருயிர் செய்கு நாயகம் தலைமையின் கீழ் செயல்படும் போது மட்டுமே நாம் உயர்த்தப்படுவோம். அவர்களைவிட பெரிதாகவோ, அல்லது எங்களைக் கொண்டுதான் இது நடைபெறுகிறது என்று தவறாக சிந்தித்தாலும் சிந்திப்பவர்களுக்கே கேடு என்பதை நாம் வரலாற்று நிகழ்வுகளின் மூலம் அறிவோம்.ஆருயிர் செய்கு நாயகம் ஏற்படுத்தியுள்ள ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை, மறைஞானப்பேழை, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ் சங்கம், அத்தரீகத்துல் ஹக்கியத்துல் காதிரிய்யா, அவுனியா உலக அமைதி அறக்கட்டளை, மதரஸத்துல் ஹஸனைன் பீ ஜாமிஆ யாசீன், அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் உலகக்கல்விக்கூடம் இவை எல்லாம் இந்த இஸ்லாமியை அடிப்படை உண்மையான வஹ்தத்துல் வுஜூதை என்றும் பறை சாற்றிக் கொண்டே இருக்கும். மேலும் இவை அனைத்தையும் மேலும் அவர்களுடைய முரீதுப் பிள்ளைகளையும் வழிநடத்தும் ஆற்றல் மிக்க தலைவராக தங்களின் அருமைத் திருப்பேரர் செய்யிதுனா யாஸீன் அலி நாயகம் வாப்பா நாயகம் அவர்களை தன்னுடைய உண்மையின் ஆற்றல் மிக்க வாரிசாய் தந்துள்ளார்கள்.

இரண்டை விட்டுச் செல்கிறேன் அதைப்பற்றி பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிதவறமாட்டீர்கள் ஒன்று, அல்குர்ஆன் – மற்ற ஒன்று இத்ரத்தீ என் குடும்பத்தார்கள் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்லுக்கு ஏற்ப அதே பாரம்பரியத் தொடரில் இன்று சங்கைமிக்க வாப்பா நாயகத்தின் இளமைத்தோற்றமாக சையிதுனா யாஸீன் அலி நாயகமாகிய முஹம்மதிய்யத் தலைமை உலகை ரட்சிக்கத் தொடர்கிறது. அல்ஹம்து லில்லாஹ்.

ஆருயிர் செய்கு நாயகம் உருவாக்கித் தந்தது, இன்னும் உருவாக்க விட்டுச் சென்றது, பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தல், சங்கைமிகு செய்கு நாயகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தர்ஹா கட்டிடம் தோற்றுவித்தல், இன்னும் இது போன்ற பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி, மேலும் மேலும் இஸ்லாமிய ஆணிவேரான வஹ்தத்துல் வுஜூத் ஞானம் தழைக்க உழைக்க இருக்கும் எங்களின் வாப்பா நாயகம் செய்யிது யாஸீன் அலி நாயகத்தின் தலைமையில் நாம் அனைவரும் அணி திரண்டு அவர்களின் திருப்பணியில் அவர்களின் திருக்கட்டளைகளை ஏற்று நடக்கும் உயர் கூட்டமாய் அணி திரள்வோம். ஹக்கோடு ஹக்காகக் கலந்து வாழும் நம் ஆருயிர் செய்கு நாயகம் (ரலி) நம் அனைவரையும் இரட்சிப்பார்களாக. ஆமீன். வஸ்ஸலாம்.

*(சென்ற ஏப்ரல் இதழில் பல பிழைகளுடன் வெளிவந்த இக்கட்டுரை இம்மாதம் திருத்தத்துடன் வெளியிடப்பட்டது)*

---

## அனைத்து சபைகளிலும் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் 89 ஆம் உதயதின சிறப்பு நிகழ்ச்சிகள்

♦ காலத்தின் உத்தமர், காமில் ஷைகு, குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்– அவர்களின் உதயதினமான ஷவ்வால் பிறை 16 அன்று திண்டுக்கல் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பில் ஜனாப். ஜே. முஹம்மது சதக்கத்துல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் பைத்துன்னதா இல்லத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. 25 .4. 2024 வியாழன் மக்ரிபு தொழுகைக்குப்பின் கஸீதத்துல் அஹ்மதிய்யா, கஸீதத்துல் அவ்னிய்யா ஓதல் மஜ்லிஸும், வெள்ளிக்கிழமை காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை “ நெஞ்சில் நிறைந்த நாயகரை நெகிழ்ந்தே நாம் போற்று வோம்” என்ற தலைப்பில் சொற்பொழிவு மஜ்லிஸும் நடைபெற்றது. துஆ வுக்குப் பின் முரீதுகளின் இல்லங்களுக்கும், ஏழைகளுக்கும் தப்ரூக் உணவு வழங்கப்பட்டது.

♦ இராமநாதபுரம் சபை சார்பாக 28.4.2024 ஞாயிறு அன்று சபைத் தலைவர் பீர்ஒலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் இல்லத்தில் கஸீதத்துல் அஹ்மதிய்யா, கஸீதத்துல் அவ்னிய்யா ஓதப்பட்டு, முதுகுளத்தூர் பக்ருத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் சார்பாக கந்தூரி உணவு வழங்கி துஆ செய்யப்பட்டது.

♦ மற்றும் மதுக்கூர், பெரம்பலூர், சென்னை, சபைகளிலும் கொண்டாடப்பட்டது.

♦ துபை சபையில் வாப்பா நாயகம் அவர்களின் உதயதினம், இளைய நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் அலி நாயகம் அவர்களின் உதயதினம் (ஏப்ரல் 25) சங்கைமிகு அன்னையார் ஸயீதா உம்மா அவர்களின் நினைவு தினம் ஆகிய முப்பெரும் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# படேசாஹிப் ஹள்ரத் (ரலி)

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

கடலூரில் உள்ள மஞ்சக் குப்பம் என்னும் இடத்தில் உள்ள தென்னாற்காடு மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை எழுத்தராக ஒரு முஸ்லிம் பணியாற்றி வந்தார். அவர் மிகவும் எளிமையான தோற்ற முடையவர். பேச்சும் மிகவும் மென்மையாகவும் அருமையானதாகவும் இருக்கும்.

அலுவலகம் வருபவர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வாங்கம்மா, இருங்கம்மா என்றுதான் அழைப்பது வழக்கம். தம்மிடம் உதவி கேட்டு வருபவர்கள் அனைவரையும் அன்பாக வரவேற்று தம்மால் முடிந்தவற்றை உடனடியாகச் செய்து கொடுத்து விடுவார். அது மட்டும் அல்லாமல் அலுவலகத்தில் உடன் பணியாற்றும் அனைவரிடமும் எந்தப் பாரபட்சமும் காட்டாது ஒரே மாதிரியாகவே பழகும் பண்பாளர்.

அவரது மேசையில் மேல் தினமும் கம கம என்று ஊது பத்தி புகைந்து கொண்டே இருக்கும். அதோடு ஒரு சிறு கிண்ணத்தில் கொஞ்சம் சந்தனமும் கரைத்து வைக்கப்பட்டிருக்கும். இன்னும் ஒரு சிறு கிண்ணத்தில் கற்கண்டு கிடக்கும்.

அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் இவரை சாமி என்றே அழைப்பது வழக்கம். அவர்கள் அலுவலகம் வந்ததும் நேரே இவர்கள் முன்வந்து பிரசாதம் பெற்றுக் கொண்டுதான் தம் வேலையை தொடங்குவார்கள். இப்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையே ஒரு கோவிலாக மாற்றிய பெருமை நம் வலீகள் கோமான் சாஹிபுல் வக்த் பத்ருத்தீன் அஹமது என்ற திருநாமம் கொண்ட படே சாஹிப் ஹள்ரத் அவர்களையே சாரும். அன்னாரது இல்லமும் மஞ்சக் குப்பத்தில்தான் இருந்தது. நானும் வலிய்யுல் காதிர், காதிர் முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்களும் அவர்கள் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து படே சாஹிப் ஹள்ரத் அவர்களின் புனிதக் குடும்பத்தாரை சந்தித்து உரையாடி விட்டுவந்தோம்.

நம் ஹள்ரத் அவர்கள் தலைமைப் பணியாற்றி வரும் சமயத்தில் அவர்கள் கீழ் பணியாற்றி வரும் எழுத்தர்கள் தங்கள் பணியை முடித்து தலைமை அலுவலரின் பார்வைக்குக் கொண்டு செல்வார்கள். அப்படி வருபவர்களின் எழுத்துப் பணிகளை நம் ஹள்ரத் கோமான், தமது ஆள்காட்டி விரலை அவர்கள் எடுத்து வந்தவற்றின் மேல் வைத்து கண்களை மூடிக் கொண்டு அப்படியே நகர்த்திக் கொண்டே

போவார்கள். தவறு நடந்த இடத்தில் கையில் அப்படியே அங்கு நின்று விடும், உடனே ஹள்ரத் அவர்கள் யாஹக் என்று கூறி அங்கு அடையாளம் இட்டு விட்டு மேலே தொடர்வார்கள். அந்தப் பணியாளர் அதைத் திரும்ப எடுத்துச் சென்று தவறை சரி செய்தபின் வந்து அவர்களிடம் காட்டுவார்கள். உடனே கையொப்பம் இட்டு சந்தோஷமாக அனுப்பி வைப்பார்கள்.

சிலசமயத்தில் நம் ஹள்ரத் படே சாஹிப் ஆண்டகையவர்கள் அலுவலகத்திற்கு வராமல் இருந்து விடுவார்கள். ஆனால் அன்றைய அவர்களுடைய பணிகள் யாவும் சரியாக முடிக்கப் பட்டிருக்கும். இதனால் மேல் அதிகாரிகள் அவர்கள் வராவிட்டால் அவர்களை ஏன் வரவில்லை என்று கேட்கமாட்டார்கள்.

ஒருநாள் அவர்களின் மேல் அதிகாரி வெள்ளைக்காரர் ஒருவர் புதிதாக பணிக்கு அங்கு வந்திருந்தார். அவர் அலுவலகத்தை சுற்றிப் பார்த்து வரும் போது ஹள்ரத் அவர்கள் மேசை மீது இருந்த ஊதுபத்தி, சந்தனம் கற்கண்டு இவற்றைப் பார்த்து கோபமாக வந்து “வாட் நான் சென்ஸ்” என்று அவற்றை யெல்லாம் கீழேதள்ளி விட்டார். எல்லோரும் அதிர்ச்சியடைந்தனர். நம் ஆண்டகையவர்கள் மட்டும் புன்முறுவல் பூத்தபடி மௌனாகவே நின்றிருந்தார்கள்.

இரவு வீட்டுக்குப் போனான். தலைவலி வந்துவிட்டது. இருக்கவும் முடியவில்லை படுக்கவும் முடியவில்லை. திண்டாடினான். தைலம் மருந்து மாத்திரை சாப்பிட்டுப் பார்த்தும் பலன் இல்லை. அவனுக்கு பொறிதட்டியது. நாம் அலுவலகத்தில் அந்த மனிதருடைய மேசைமீதிருந்தவற்றைத் தட்டி விட்டதால் இருக்குமோ என்று பயந்து உடனே அலுவலகம் வந்து அவர்களிடம் மன்னிப்பு கேட்டபின், ஹள்ரத் அவர்கள் புன்சிரிப்புடன் கொஞ்சம் சந்தனத்தை நெற்றியில் பூசிவிட்டு கற்கண்டு சிலவற்றை வாயில் போட்டுக்கொள்ளச் சொன்னார்கள். அவ்வளவுதான் தலைவலி பறந்தே போய்விட்டது.

இன்னும் சில நாட்கள் கழித்து, முன்பு வந்தவரை விட உயர் அதிகாரி, அவர்கள் அலுவலகத்திற்கு வருகை புரிந்தார். அவரை வரவேற்றுப் பேசுவதற்கு படேசாஹிப் ஹள்ரத் அவர்களையே அனைவரும் வேண்டிக் கொண்டார்கள். ஹள்ரத் அவர்களும் அதை மறுக்காமல் ஏற்று ஆங்கிலத்தில் மிக அருமையான வரவேற்புரையை பேசி முடித்தார்கள். அனைவருக்கும் பெரிய சந்தோஷம். வந்திருந்த உயர் அதிகாரியே இவர்களது ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்து போனார். உடனே நம் ஆண்டகையவர்களைப் பற்றி அலுவலக அதிகாரிகளிடம் விசாரித்தறிந்தார். இவர்களுக்குத் தரப்படும் சம்பளம் இவர்களது புலமைக்கு மிகவும் குறைவானதாக அந்த அதிகாரிக்குப் பட்டது. வந்த அதிகாரி நம்

ஆண்டகையவர்களை அழைத்துப் பாராட்டிவிட்டு உங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் உங்கள் தகுதிக்குக் குறைவாக உள்ளதாக நான் உணர்கிறேன் என்றார். உடனே நம் ஆண்டகையவர்கள் அதை மறுத்து விட்டார்கள். அந்த அதிகாரி வியப்பின் உச்சத்திற்கே போய் விட்டார். இப்படியும் ஒரு மனிதரா? என்று. இதன்பின் ஹள்ரத் அவர்களின் மனம் அவர்களுடன் பெரும் போராட்டமே நடத்தத் தொடங்கிவிட்டது. அவர்களாகவே வலிய வந்து உங்கள் சம்பளத்தை உயர்த்தித் தருவதாகச் சொன்னதை ஏற்றுக் கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! இப்படி செய்து விட்டாயே! உனது குடும்பம் இன்னும் சிரமப்பட்டுக் கொண்டுதானே இருக்கிறது! வலிய வந்ததை இப்படித் தடுத்துவிட்டாயே.. என்ன கைசேதம்! என்று இடித்துரைத்தது.

அப்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவேயில்லை. என்னையா இடித்துரைக்கின்றாய்? எனக்கு என்ன பணத்தாசை பிடித்துக் கொண்டதா? என்னைக் கெடுக்கப் பார்க்கின்றாயா? உன்னை என்ன செய்கின்றேன் பார் என்று மறுநாள் கடும் வெய்யிலில் ஒரு பாறை மீது வெறுங்காலுடன் ஏறி தம் கைகளக் கட்டிக் கெண்டு நின்று விட்டார்கள். வெயிலின் கொடுமை தாங்காது அவர்களின் மனம், நான் இனிமேல் இவ்வாறு கூற மாட்டேன். வெயில் தாங்கமுடியவில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தகிக்கறது. வியர்வையோ ஆறாகப் பெருக் கெடுத்து ஓடுகின்றதே . என்று மனம் கிடந்து துடியாய்த் துடித்துப் போனது. சரி வா உள்ளே போகலாம் என்று அலுவலகத்திற்கு உள்ளே சென்றார்கள். உனக்கு எழுதுகோலைப் பிடித்துத் திறம்பட எழுதத்தெரியும் என்ற மமதையால்தானே இவ்வாறு கிடந்து குதித்தாய். இதோ பார் என்று அருகிலிருந்த கோடு போட உதவும் தடியை எடுத்து வலது கைக் கலிமா விரலின் மேல் ஓங்கி அடித்து விட்டார்கள். அந்த விரல் அடிபட்டு மடங்கிப்போனது. வாழ்நாள் வரை அது மடங்கியேதான் இருந்தது. இப்படிப்பட்ட அற்புத மனிதர்தான் நம் சாஹிபுல் வக்த் படே சாஹிப் ஹள்ரத் அவர்கள்.

சாஹிபுல் வக்த் பதுருத்தீன் அஹமது ஹள்ரத் அவர்கள் கி.பி. 1875ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் நாள் விழுப்புரத்தில் பிறந்தார்கள். இவர்களது பூர்வீகம் கர்நாடகா மாநிலத்தில் உள்ள பில் குண்டு என்னும் ஊராகும். இவர்களது தந்தையார் அங்கிருந்து குடிபெயர்ந்து விழுப்புரம் வந்தடைந்தார்கள். அப்படி அவர்கள் வாழ்ந்து வரும் சமயத்தில் அவர்களுக்கு ஓர் அழகிய ஆண்மகவு பிறந்தது அதற்கு ஸய்யிது ஷாஹ் பதுருத்தீன் அஹ்மது என்னும் திருப்பெயர் சூட்டி மிகிழ்ந்தார்கள். இவர்கள் பெயரில் ஸய்யிது என்று வருவதால் இவர்கள் செய்யிதுமார், அதாவது அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழித்தோன்றல் அல்ல.

இந்த அருந்தவக் குலக் கொழுந்தை மிகவும் அருமையுடனும் அன்புடனும் பாராட்டி சீராட்டி வளர்த்து வந்தார்கள். அந்த மகனே பிற்காலத்தில் ஸாஹிபுல் வக்த் மஞ்சவீநாயகம் என்று அழைக்கப்பட்டார்கள்.

சிறுவயதில் சிறிதளவு மார்க்கக் கல்வியையும் பின்பு ஆங்கிலவழிக் கல்வியையும் பயின்றார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ் தன்னால் தேர்ந்தெடுக்கப்படும் நல்லடியார்களுக்கு அவன் புறத்திலிருந்து பிரமிக்கத்தக்க அறிவுப் பாடங்களைத் தந்து விடுகிறான். அதுமட்டும் அவன் இஷ்டப்படியே நடப்பதாகும். அப்படி இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியார்களில் நம் மஞ்சவீ நாயகமும் ஒருவராவர்.

மஞ்சக்குப்பத்தில் உள்ள தாசில்தார் அலுவலகத்தில் ஒரு சாதாரண எழுத்தாளராக வேலைக்குச் சேர்ந்தார்கள். பின்பு படிப்படியாக உயர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை எழுத்தாளராக பணி உயர்வு பெற்றார்கள். அந்தச்சமயத்தில்தான் நாம் ஆரம்பத்தில் எழுதிய சம்பவங்கள் அனைத்தும் நடந்தன.

1923 ஆம் ஆண்டுவரை மஞ்சவீ நாயகம் அவர்கள், கடலூரில் பணியாற்றி விட்டுப் பின்னர் நெல்லூருக்கும் கர்நூலுக்கும் இறுதியாக சென்னை தண்டையார் பேட்டையில் உள்ள அலுவலகத்திற்கும் பணி மாற்றம் செய்யப்பட்டார்கள்.

இவர்கள், கடலூர் மஞ்சக்குப்பத்தில் பணியாற்றி வந்த சமயத்தில் தான் நெல்லிக்குப்பத்திலிருந்த ஸர்தார் அப்துல்கறீம் ஹள்ரத் அவர்கள் இவர்களிடம் வந்து பைஅத் பெற்று ஞானக் கல்விகளையும் பயின்றார்கள். ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள் பொதக்குடி அந்நூருல் முஹம்மதிய்யா அரபிக் கல்லூரியில் முதல்வராக இருந்த போது மஞ்சவீ நாயகம் அவர்களை அந்த மதரஸாவுக்கு அழைத்து வந்து அங்கு பயிலும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கும்படி வேண்டிக் கொள்வார்கள். அந்த சமயம் மஞ்சவீநாயகம் அவர்களிடம் அறிவுரைப் பெற்றவர்கள் எல்லோரும் பெரும் பாக்கியசாலிகள். இதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். அப்படி மஞ்சவீ நாயகம் அவர்கள் அந்த மதரஸாவில் அறிவுரை யாற்றும் போது, ஸர்தார் காமில் வலீ ஷாஹ் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள் நல்ல, பாம்பு அம்மா! அவர்களிடம் மிகவும் பயந்து நடந்து கொள்ளுங்கள். என்று கூறிவிட்டு தம்மைப்பற்றியும் சிறிதளவு கூறி விட்டு ஹள்ரத் இருக்கிறார்களல்லவா? இவர் தண்ணீர்ப் பாம்பு அம்மா! யார் என்ன செய்தாலும் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்றும் கூறி முடித்தார்கள். *(தொடரும்)*

இந்த இடத்தில் இன்னொரு விசயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இப்போது நம் முன்னே முன்னிலையிலே வீற்றிருக்கின்றார்களே, திருக்குடும்பத்தார் ஒவ்வொருவரும் வலிமார்கள் தாம். யாரையும் சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம். மௌலானாமார்களுக்கு கை கொடுக்கின்றேன் என்ற பெயரில் பட்டும் படாமல் கை கொடுத்துவிட்டுப் போய் விட வேண்டாம். அவர்கள் அனைவரும் விலாயத்துடைய மனிதர்கள். வரவேற்புரையில் தம்பி இக்பால் கூறியதுபோன்று, சின்னக் குழந்தையாக இருக்கும்போதே வாப்பா நாயகமவர்களின் அருமைச் சகோதரி அவர்கள் கூறிய விசயத்தை நாம் கேட்டோம். ஆகவே, வயது வேறுபாடின்றி திருக்குடும்பத்தார் அனைவருமே விலாயத்தை உடையவர்கள் தாம். அதனை நாம் எப்போதும் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்களிடம் மிகுந்த மரியாதையுடனும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் அன்பும் ஆதரவும் உதவியும் கண்காணிப்பும் நம் அனைவருக்கும் நிலைத்து நிற்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வஸ்ஸலாம்.

.... என்பதாக, **தியாகி. கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் தங்கள் வாழ்த்துரையை நிறைவு செய்ய, நிகழ்ச்சி நெறியாளர் **மௌலவி. அல்ஹாஃபிழ். வி.எம்.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள், வாழ்த்துரை வழங்க வருமாறு கலீபா. **Dr. S.A. அஷ்ரப் அலி M.D., D.M., ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களை அழைத்தார்.

**சென்னை, கலீபா. Dr. S.A. அஷ்ரப் அலி M.D., D.M., ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் வாழ்த்துரை :**

விலாயத்தும் குத்பிய்யத்தும் சங்கிலித் தொடர் போல் பின்னிப் பிணைந்து

வருகின்ற ஒரு சிறப்பான பாரம்பரியத்தில் வந்துதித்த நம்முடைய விழாத் தலைவர் அவர்களே, இங்கு முன்னிலை வகிக்கக்கூடிய திருக்குடும்பத்தார்களே, நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழித்தோன்றல்களே, மார்க்க அறிஞர்களே, கலீபாக்களே, முஹிப்பீன்களே, முரீதீன்களே, ஆஷிகீன்களே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

இதற்கு முன்னர் சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் நான் கூறியிருந்தேன். அதாவது, எப்படி திருமுல்லைவாசலில் மறைந்து வாழும் குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் யாஸீன் ஸானீ (இரண்டாம் யாஸீன்) ஆக இருக்கின்றார்களோ, அதுபோல நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் முஹிய்யுத்தீன் ஸானீ (இரண்டாம் முஹிய்யுத்தீன்) ஆக இருக்கின்றார்கள், என்றேன். இவற்றையெல்லாம் விளக்கினால், நிறைய நேரம் எடுக்கும். வக்தைப் பேணக்கூடியதொரு நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கின்றோம். ஆகவே, சுருக்கமாக ஒரு சில கருத்துகளை மட்டும் கூறி எனது உரையை நிறைவு செய்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இங்கு நாம் வீற்றிருக்கும் இந்த மதுரஸாவுக்கும், அன்றைய காலத்தில் கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹுஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் தோற்றுவித்த மதுரஸாவிற்கும் சில பொருத்தங்கள் உள்ளன. அவர்கள் பக்தாதிலே ஆரம்பித்த மதுரஸாவை முழுச் செலவில் நிர்மாணம் செய்தவர்கள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. பொருள் வசதி படைத்தவர்கள், பொருட்செல்வம் தந்து மதுரஸா உருவாக உதவினார்கள். வசதியில்லாதவர்கள், தங்கள் உடல் உழைப்பு உள்ளிட்ட ஏனையவற்றில் பங்குகொண்டு, அந்த மதுரஸா உருவாக உதவியாக இருந்தார்கள். அதுபோலத்தான் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் இந்த மதுரஸாவும் உருவாகி உள்ளது. பலர் டொனேஷன் கொடுத்ததன் பேரில் நிலம் வாங்கப்பட்டது. அதேபோல, பலரது பங்களிப்பில் கட்டடமும் நிர்வாகமும் உருவாக்கப்பட்டது. நிறைய முரீதீன்களும், முஹிப்பீன்களும், ஆஷிக்கீன்களும் தங்களது உழைப்பை, பங்களிப்பை நல்கியதன் மூலம் இந்த மதுரஸா உருவானது. இரண்டாவது, விஷயம், பகுதாதிலே கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் புனித ரவ்ளா ஷரீஃபைக் கவனித்தால் தெரியும். அவர்கள் அந்த மதுரஸாவிலேயே தான் அடக்கப்பட்டிருக்கிறார்கள். நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களும் அவர்கள் நிர்மாணித்த, அவர்களுக்கு பெரும் ஆர்வமும் விருப்பமுமாய் இருந்த அவர்களது

மதுரஸாவிலேதான் அவர்கள் அடக்கம் பெற்றிருக்கிறார்கள். அவர்களது மறைவு இலங்கையில் நிகழ்ந்த போதிலும், அவர்களது ஆதார் முகத்தஸ் இந்த மதுரஸாவில் அமைந்துள்ளது.

மூன்றாவது விஷயம், அவர்களது மறைவும் கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களது மறைவோடு ஒத்திருக்கிறது.

கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் துன்யாவை விட்டுப் பிரிந்தபோது நிகழ்ந்தவை நாம் எல்லாருக்கும் நினைவிலிருக்கும். அவர்கள், இதுபோன்று உடல் அசௌகரியம் ஏற்பட்டு, பின்னர் துன்யாவை விட்டும் பிரிந்தார்கள். நோயின் அசௌகரியம் தாளாமல் கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் படுக்கையில் புரண்டு கொண்டு இருக்கும்போது, அவர்களுடைய புதல்வர் அப்துல் அஜீஸ் மௌலானா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், இதுகுறித்துக் கேட்டார்கள். அதற்கு, கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் கூறினார்கள் : நான் ஹக்குடைய இல்மிலே புரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். எனக்கு ஏதும் இடைஞ்சல் இல்லை என்றார்கள். அதேபோன்று, கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களுடைய இன்னொரு புதல்வர் அப்துல் ஜப்பார் மௌலானா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், தங்களது தந்தையாருக்கு உடலில் எந்த இடத்தில் வேதனை இருக்கின்றது என்று கேட்கும்பொழுது, உடலில் எனக்கு வேதனை இல்லாத தலம் – இடம் ஏதும் இல்லை. என்னுடைய இதயத்தில் மாத்திரம் வேதனை இல்லை. ஏனென்றால், அது அல்லாஹ்விடத்தில் இருக்கின்றது, என்பதாக கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் தெரிவித்தார்கள்.

சமீபத்தில், நான் இலங்கை சென்று நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைத் தரிசித்தபோது, அவர்களும் இப்படித்தான் சொன்னார்கள், உடம்பு முழுக்க வருத்தம் என்று சொன்னார்கள். சிலோன் பாஷையில் வருத்தம் என்றால், வேதனை, நோவு, வலி என்று அர்த்தம்.

இவ்வாறாக, நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களையும் கௌதுல் அஃலம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களையும் பொருத்திப் பார்த்து எவ்வளவோ விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், நேரச் சுருக்கம் கருதி, இரண்டு விஷயங்களை மாத்திரம் கூடுதலாகச் சொல்லி எனதுரையை முடித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், தூல உடலோடு இருந்த சமயத்தில் திருமணப் பத்திரிகைகளில் – மற்ற பிரசுரங்களில் ரலியல்லாஹு அன்ஹு என்று எழுதுவார்கள்.

அது எனது மனதுக்கு மிகுந்த வேதனை கொடுக்கும். ஆனால், இப்போது அவ்வாறு தாராளமாக எழுதிக் கொள்ளலாம். அதனால், என்னிடமிருந்து எந்த ஆட்சேபனையும் இல்லை.

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், இலங்கையில் மறைந்தும் அவர்களது திருக்குடும்பத்தார் அவர்களது ஆதார் முகத்தஸை இங்கு அவர்கள் நிர்மாணித்த மதுரஸாவில் அடக்குவதற்கு சம்மதம் தெரிவித்து, மனப்பூர்வமாக – உளப்பூர்வமாக அவர்கள் ஆவன செய்து தந்ததற்கு தென்னிந்தியா என்ற இந்த நிலப்பரப்பு இருக்கும் காலமெல்லாம் நாம் அனைவரும் அந்தத் திருக்குடும்பத்தாருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சியில் எனக்குப் பின்னால் நிறையப் பேர் பேசவேண்டியிருப்பதால், அதன் அருமை கருதி, எனதுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

.......... என்பதாக, **கலீபா. S.A. அஷ்ரஃப் அலி M.D., D.M. ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் வாழ்த்துரையை நிறைவு செய்து கொள்ள,

நிகழ்ச்சி நெறியாளர் **மௌலவி.அல்ஹாஃபிழ். வி.எம்.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள், அழகிய கஸீதா பாடிட வருமாறு **மதுக்கூர் கலீபா. எம். முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களை அழைத்தார்.

**கலீபா. எம். முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்** தமக்கே உரிய தனித்துவக் குரல் வழியே, காலத்தின் தூதர் கலீல் அவ்ன் நாதர் கரை சேர்க்கும் குருவல்லவா? நம்மில் இருள் நீக்கும் ஒளியல்லவா? வல்ல அல்லாஹ்வின் தூதர் நபிநாதர் பேரர் அருள் யாஸீன் மகவல்லவா? எங்கள் உயிருக்கு உயிர் அல்லவா?.... என்னும் மெய்ஞ்ஞான கீதத்தைப் பாடி அனைவரையும் உருக வைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து, யாஸீனிய் மௌலவிகள் பேரவையின் தலைவர் **மௌலவி. ஏ. கலீல் ரஹ்மான் ஆலிம் யாஸீனிய் அவர்களின் வாழ்த்துரை:** சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு – மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் 12ஆம் ஆலிம் யாஸீனிய் பட்டமளிப்பு விழா நிகழ்வு – முதலாம் ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழாவைத் தலைமை தாங்கி சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நமது உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத்

திருப்பேரர் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் அவர்களுக்கும், முன்னிலை வகிக்கக்கூடிய பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதக் குடும்பத்தார் அனைவருக்கும், தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா தரீகாவின் கலீபாப் பெருமக்களுக்கும், சிறப்பிற்குரிய இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களான அனைவருக்கும் மதுரஸாவின் உஸ்தாதுமார்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள் அனைவருக்கும் புனிதமான இந்த சபைதனில் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அருளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற முஹிப்பீன்கள், முரீதீன்கள் அனைவருக்கும் எனது பணிவான ஸலாத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த வல்ல ரஹ்மானுக்கும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது வாழ்த்துரையை ஆரம்பம் செய்கின்றேன்.

இங்கு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய செய்திகள் பல இருந்தாலும் கூட, இந்தப் புனிதமான மஜ்லிசுக்குப் பொருத்தமான 3 செய்திகளை மட்டும் நினைவுகூர்ந்து விட்டு இன்ஷா அல்லாஹ் எனது உரையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

முதலாவதாக, நினைவேந்தல் நிகழ்வு... நமது ஆருயிர் ஷைகு நாயகம் அவர்களைப் பற்றி பேசவேண்டுமென்று சொன்னால், அவர்களது மேன்மைகளைப் பற்றி – அவர்களது உயர்வுகளைப் பற்றி, அவர்களது இனிய குணங்களைப்பற்றி, குழந்தைபோன்ற அவர்களது புன்சிரிப்பினைப் பற்றி, அவர்களது விருந்தோம்பலைப் பற்றி, இவ்வாறு அனைத்தைப் பற்றியும் அவர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட பலன்களைப் பற்றியும் அவர்களிடமிருந்து நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் கராமத்துகளைப் பற்றியும் பேச வேண்டுமென்றால், இங்கு கூடியிருக்கும் எல்லா முரீதுகளும் காலம் காலமாகப் பேசிக் கொண்டே தான் இருப்போம். காலம் தான் கரைந்து கொண்டே இருக்குமே தவிர, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் நினைவலைகள் இன்னும் இன்னும் பெருகிக் கொண்டே தான் செல்லும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களையெல்லாம் தொகுத்து, அற்புத அகில நாதர் எனும் காவியத்தில், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் குறிப்பிடும்போது,

கற்றிலாக் கலைக்கடல்

காட்டி வைத்த புதுமையில்

வெற்றி வேதமல் குர்ஆன்

மேன்மை மிக்க தாகுமே

அண்ணலார் மறைவினோ

டற்புதுங்கள் மறைந்தன

வண்ணமிக்க திருக்குர்ஆன்

மறைந்திடாத வற்புதம்

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முஃஜிஸாத்து களெல்லாம் ஸஹாபாக்கள் எல்லாம் அனுபவித்திருந்தாலும் கூட, அவற்றில் திருக்குர்ஆன் ஷரீஃப்தான் மணிமகுடமான அற்புதமாக விளங்குகின்றது என்பதாகக் குறிப்பிடுவார்கள்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அற்புதங்களையெல்லாம் அவர்களோடு உடனிருந்து நாமெல்லாம் அனுபவித்திருந்தாலும் கூட, அவர்களின் கராமாத்துகளின் மணிமகுடங்களாக, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் நமக்காக உருவாக்கிய மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியும் – நமக்காக யாத்தளித்த அவர்களது அற்புத ஆக்கங்களும் தான் திகழ்கின்றன. அவை, நாமெல்லாம் மறைந்துவிட்டாலும் கூட கியாமத் நாள் வரை சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருப்புகழை எடுத்துக் கூறிக் கொண்டே இருக்கும்.

தமிழ்நாட்டில் எத்தனையோ புகழ்பெற்ற மதுரஸாக்கள் இருந்தாலும், அவற்றில் நமது மதுரஸா தனித்துவமானது, மேன்மையானது, முன்னோடியானது. இவ்வாறு ஒவ்வொரு தலைப்பின்கீழேயும் பல்வேறு தலைப்புகளைப் பதிவு செய்யலாம். ஆனால், நேரத்தின் அருமை கருதி, ஓரிரு விஷயங்களை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மதுரஸாவின் தனித்துவத்தை விளக்க, மதுரஸாவின் திருப்பெயரே அதற்கு முதற் சான்றாக இருக்கின்றது. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் எப்படி ஹஸனீயாகவும் ஹுஸைனீயாகவும் திகழ்கின்றார்களோ அதுபோலவே நமது மதுரஸாவின் அவ்விரு திருநாமங்களையும் ஒன்றித்த வண்ணம், மதுரஸத்துல் ஹஸனைன் என்னும் திருப்பெயர் கொண்டுள்ளது.

யார் இந்த மதுரஸாவிற்கு எதை நேர்ச்சை செய்தாலும், மதுரஸத்துல் ஹஸனைன் என்னும் இந்தத் திருநாமமே போதும், அதுவே அவர்களுக்கு வேண்டியவற்றை இத்திருநாமமே நல்கும் என்பதாகக் குறிப்பிடுவார்கள். இங்குக்

கூடியிருக்கும் முரீதீன்கள் முஹிப்பீன்களான நாம் அனைவரும் இன்னும் மதுரஸாவிற்கு நன்கொடை வழங்கிவரும் கொடையாளர்களும் இந்த உண்மை ஒவ்வொரு நாளும் ஊர்சிதப்படுத்தி வருகின்றோம். இரண்டாவது விஷயம், இன்று உலகில் எத்தனையோ மதுரஸாக்கள் இருக்கின்றன. அவ்வாறு உருவாகும் மதுரஸாக்களின் முக்கிய நோக்கம், ஷரீஅத் என்னும் மார்க்கச் சட்டக் கலையை ஒவ்வொரு முஸ்லிமும் விளங்கி நடக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். ஆனால், நமது மதுரஸாவின் முக்கிய நோக்கம்... ஷரீஅத் என்னும் மார்க்கச் சட்டக் கலையைக் கற்கும் ஆலிம்கள் அதனோடு மஃரிபத் என்னும் ஞானக் கலையைத் தெளிவுறக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான். அவ்வலுத்தீனி மஃரிபத்துல்லாஹ், மார்க்கத்தில் முந்தியது அல்லாஹ்வைப் பற்றி அறிவதுதான் என்பதாக அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுறுத்தினார்களே, அந்த மெய்ஞ்ஞானக் கலையை ஆலிம் ஆகும் ஒருவர் அறிந்து அந்த ஞானக்கலையை உலகமெங்கும் பரப்பிடல் வேண்டும் என்பதுதான் மதுரஸாவின் முக்கிய நோக்கமாகும். பொதுவாக எல்லா மதுரஸாக்களிலிருந்தும் ஆலிம்கள் – மார்க்க அறிஞர்கள் வெளிவருவார்கள். நமது மதுரஸாவிலிருந்துதான் ஆரிஃபீன்கள் – சூஃபிகள் வெளிவார்கள். இது நமது மதுரஸாவின் மேன்மைகளில் ஒன்றாக இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

அடுத்ததாக நான் இங்கே தெரிவிக்க விழைவது, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் ஆக்கங்களைப் பற்றி... அவை காலத்தால் கரைந்திடாத கராமாத்துகள் ஆகும். என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியதாகும். நம்மில் அதிகம்பேர் கராமத்துச் செய்யக்கூடியவர்கள் தாம் வலிமார்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பர். அதிலும் அதிகமாகக் கராமாத்துகள் செய்யக்கூடியவர்கள் மிகப்பெரிய வலியுல்லாஹ் என்று கருதக்கூடிய காலம் இது. ஆனால், நமது உயிரினும் மேலான சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் மிகக் கனிவாகச் சொல்வார்கள் :

வலியுல்லாஹ் ஒருவரின் நோக்கம் என்ன தெரியுமா? ஞானத்தில் மேன்மையாக இருப்பதுதான். மேலும்,

சித்தி சித்தி எனக்கேட்டு என்னில் சிரத்தினைச் சாய்ப்பதை ஓட்டு.... எனக்கூறி, எங்களது ஞான மேன்மையையும் உயர்வையும் நாடி எங்களிடம் அண்டுங்கள் என்பதாக வலியுறுத்தி உள்ளார்கள். அவர்களது ஞான மேன்மையை அவர்களது ஆக்கங்கள் வழியாக நாம் அறிய முற்படலாம். அவ்வற்புத ஞான ஆக்கங்களைத் தினசரி படித்து, ரசித்து, விழுங்கி, விளங்கி, மூழ்கி, முத்தெடுக்கும் மனத்தாருக்கு மட்டுமே இனிக்கும் பேரின்பப் பொக்கிஷமாகும்.

ஞானம் என்பது மறைபொருளாக – எட்டாக் கனியாக – அப்படியே எட்டினாலும் புரியாத புதிராக – புரிந்தாலும் உள்ளதை உள்ளபடி விளங்க இயலாதவாறு மருட்சி கொள்ளும் சூத்திரமாக இருந்தபோதிலும் அந்த ஞானப் பொக்கிஷத்தை அழகுத் தமிழிலே – மிக இலகுவாக, எளிதாகக் கடைக்கோடி முரீதும்கூடப் பெற்று உண்ணக்கூடிய கனியாக, மறைவான மறைஞானக் கருத்துகளைப் பட்டவர்த்தனமாக – தெளிவாக, எதிர்ப்புகள் முளைத்தபோதும் பின்வாங்காமற் சத்தியத்தை இன்னும் சத்தமாக, பாமரனுக்கும் புரியும் வண்ணம் யாத்தளித்த ஆக்கங்களைப் பற்றியும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பேராற்றல் பற்றியும் வார்த்தைகளால் வடித்திட இயலாது. அதன் ஆழத்தை அளக்க முடியாது.

நிறைவாக, இன்று பட்டம் பெறும் மௌலவிகளுக்காக ஒரே ஒரு வார்த்தை :

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருக்கரங்களால் 28.03.2003 அன்று மௌலவி ஆலிம் யாஸீனிய் பட்டம் பெறக்கூடிய வாய்ப்பை வல்ல ரஹ்மான் எனக்கு அருளினான். இன்று நமது மதுரஸா வளாகத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கக்கூடிய மஸ்ஜிதுல் ஹக்கிய் பள்ளிவாசலின் திறப்புவிழாவும் மதுரஸாவின் முதல் பட்டமளிப்பு விழாவும் அன்றே தான் நடந்தேறின. இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவுக்கும் அன்றைய முதல் பட்டமளிப்பு விழாவுக்கும் ஒரு தொடர்பை உணர முடிகிறது. அன்று, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருக்கரங்களால் முதன்முதலில் நான் பட்டம் பெற்றேன். இன்று, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் மறுபிம்பமாகத் திகழக்கூடிய, அவர்களின் அருமைத் திருப்பேரர் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் திருக்கரங்களால் பட்டம் பெறக்கூடிய வாய்ப்பினை இந்த மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். அன்று, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் அறபியிலேயே ஆசியுரையாற்றினார்கள். அதில் அவர்கள், குறிப்பிட்ட செய்தி யாஸீனிய் மௌலவிமார்களுக்கு மட்டுமின்றி, பட்டம் பெறும் அனைத்து மதுரஸா மாணவர்களுக்கு மட்டுமின்றி, உலகெங்குமுள்ள உலமாக்களுக்கான அறிவுரையாகவும் அறவுரையாகவும் அது அமைந்திருந்தது. அதாவது, பொதுவாக மதுரஸாவில் ஸனது வாங்கி வெளியேறிவிட்டால், நாம் ஆலிமாகிவிட்டோம், ஓர் அறிஞராகிவிட்டோம், ஓதி முடித்துவிட்டோம், அனைத்தையும் கற்றுவிட்டோம் என்ற மனப்போக்கில் தாம் வெளிவருவோம். ஆனால், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் குறிப்பிட்டார்கள், இன்று பெறக்கூடிய ஸனது சான்று என்பது, ஓதி முடித்து விட்டதற்கான சான்றல்ல. அனைத்து கிதாபுகளையும் ஓதிப் படித்துக் கொள்வதற்காக அறபு மொழியைக் கற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பதற்கான சான்றுதான்... என்றருளினார்கள்.

மதுரஸாவில் ஓதும்போது நான் கற்றுக் கொண்டதைவிட, வெளியில் சென்றபிறகு, கிதாபுகளை எடுத்துப் பார்க்க வேண்டும். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் ஆக்கங்களைத் தினசரி படித்து வரும் வழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று பட்டம் பெறும் மாணவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் கனவே, ஓர் உயர்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான். ஞானத் தெளிவு பெற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்பதுதான். அவர்களது கனவை நனவாக்கக்கூடிய வாய்ப்பில் வல்ல ரஹ்மான் நம்மையும் பங்களிக்கச் செய்வானாக.... இந்த துஆவை சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பொருட்டாலும், திருக்குடும்பத்தார் பொருட்டாலும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக... என்று பிரார்த்தித்த வண்ணம் எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

**இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் தலைவரும் மறைஞானப் பேழை ஆன்மிக மாத இதழின் ஆசியருமான கலீபா. ஆலிம்புலவர். S. ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்களின் வாழ்த்துரை :**

வலிமார்களின் திருக்கூட்டம்.... சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அருட்பார்வையிலே, அவர்களின் பிரதிநிதியாக... நமக்கெல்லாம் ஷைகாக விளங்கக் கூடிய சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களையும் அவர்களது திருக்குடும்பத்தார் களையும் போற்றித் தொடங்குகின்றேன்.

ஸய்யிதுமார்கள் இத்தனைபேர் கூடி அமைந்திருக்கும் அருமையான மஜ்லிஸ். இதுபோன்ற அமைப்பை எங்கேனும் காண முடியாது. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்குருதி ஓடக்கூடிய அருமையான திருக்குடும்பத்தார். அவர்கள்தாம் நமக்கு வழிகாட்டிகள்.

கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : இரண்டை விட்டுச் செல்கின்றேன். அதில் ஒன்று, திருக்குர்ஆன் ஷரீஃப். மற்றொன்று திருக்குடும்பம் என்று கூறினார்கள் அல்லவா? அந்தத் திருக்குடும்பத்தை நாம் பற்றி இருக்கின்றோம். நாம் இம்மையிலும் உயர்ந்திருப்போம். மறுமையிலும் தலைசிறந்து விளங்குவோம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

குத்புல் மத்ஹரிய் மஹானந்த பாபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்வார்கள் : ''மன்னும் பொருளா மிடத்தில் தரிபாடுள்ளோரை எண்ணும் பொருளால் அறிதல் இயலாததாமே''

ஹக்குடைய இடத்தில் இருப்பவர்களை, உங்கள் அறிவைக் கொண்டு சிந்தித்தால் அடக்க முடியாது. அறிந்து கொள்ள முடியாது. நமது வாப்பா நாயகமவர்களிடம் நாம் அதைத் தான் பார்த்தோம்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், தங்களது ஆரம்பக் கால பட்டோலையில் எழுதியிருக்கிறார்கள், எங்களுடைய உடையைப் பார்த்து, நடையைப் பார்த்து ஏமாந்துவிட வேண்டாம் என்றார்கள். அது மிகப்பெரிய பொருள். மெய்ப்பொருள் அங்கு இருந்தது. அது தம்மை மறைத்துக் கொண்டு நம்மோடு நாமாக வாழ்ந்து நமக்கு ஹக்கை ஊட்டியது.

கௌது நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்) அவர்கள் சொல்கிறார்கள் : நான் எப்படி முரீதுகளை உருவாக்க விரும்புகின்றேன் என்று சொன்னால்... நான் "குன்" என்று சொன்னால் எதுவும் உருவாகிவிடும். அதுபோல், எனது முரீதுகளும் அவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று அருளுகிறார்கள்.

அதைப்போலவே நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், முரீதுப் பிள்ளைகளையும் மதுரஸாவிலிருந்து வெளிவரும் மௌலவிமார்களையும் கொண்டு எல்லாரையும் விட அறிவாலும் அகத்தாலும் ஒழுக்கத்தாலும் ஆன்மிகத்தாலும் உயர்ந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதைத் தான் விரும்பினார்கள்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் சொன்னார்கள் : எங்களது இந்த உடையைப் பார்த்து எளிதாக நினைத்துவிடவேண்டாம். குத்பிய்யத் என்னும் உயர்ந்த உடையை நாங்கள் அணிந்திருக்கின்றோம்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அமுதமொழிகள் ஒவ்வொன்றுமே நம்மால் விளங்க முடியாதது. நாம் நம் சிந்தனையில் இதுதான் வாப்பா நாயகம் என்று நினைத்துச் சென்றால், அவர்கள் அதையும் கடந்து இன்னும் தூரமிருப்பார்கள். நெருங்கி நெருங்கிச் சென்று, அவர்களை நாம் அடைந்துவிட்டோம் என்று நினைத்தால், நிச்சயமாக முடியாது. இதில், நாம் எல்லாருமே அவர்களிடம் தோற்றுப் போனவர்கள்தாம்.

ஆலிம்கள் ஒரு குறிப்பிட்ட மொழிக்குள்ளே அவர்களை அடக்கவேண்டும் என்று நினைப்பார்கள். ஆலிம்கள் தோற்றுவிடுவார்கள்.

தமிழறிஞர்கள், இதுதான் வாப்பா நாயகமவர்களின் அளவீடு என்று நினைப்பார்கள். அதில் தமிழறிஞர்களும் தோற்றுப் போவார்கள்.

பணக்காரர் ஒருவர் நினைப்பார், நம்மிடமுள்ள பணத்திற்காக அவர்கள் நம்மிடம் பணிந்து விடுவார்களே என்று நினைப்பார். வேலையாகாது. அந்தப் பணக்காரர் தான் தோற்றுப்போவார். யாருக்கும் அவர்கள் கட்டுப்பட மாட்டார்கள். உயர, உயர, உயர... மிக உயர்ந்த இடத்தில்... உயர்ந்த இடம் என்றால், அது தான் உச்சம்.

ஹக்கு... மெய்ப்பொருளாகவே வெளியானது, அந்தத் தத்துவத்தைத்தான் அவர்கள் இந்த உலகத்தில் நிலைநாட்டி விட்டுச் சென்றுள்ளார்கள். சாதாரண மனிதர்கள் போல் அல்ல அவர்கள். அவர்கள் தங்களது பாடலில் சொல்கிறார்கள் மன்னும் பொருளா மிடத்தில் தரிபாடுள்ளோரை எண்ணும் பொருளால் அறிதல் இயலாததாமே... அவர்களை அணுகவே முடியாது. அவர்கள் நமது நிலைக்குக் கீழிறங்கி வந்து கரம் நீட்டி எப்படியாவது ........ குறைந்தளவேனும் ஓர் ஆரிஃப் என்னும் நிலைக்காவது வந்துவிட வேண்டும் என்று தான் அருளினார்கள்.

மனிதன் தன்னை அறிய வேண்டும். தன்னை அறியாவிட்டால், அவன் எவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும் அறிவாளியாக இருந்தாலும், உயர்ந்த இடத்தில் இருந்தாலும் பிரயோசனமில்லை. மனிதன் தன்னை அறிந்து ஹக்கை அறிவதற்காகவே இந்த உலகத்தில் பிறந்துள்ளான். அந்த அறிவு கொஞ்சமாவது மனிதனுக்குத் தேவை. அதை ஊட்டுவதற்காகத்தான் அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஏச்சும் பேச்சும் எவ்வளவு... எவ்வளவு...?! எத்தனையோ விஷயங்களைத் தாங்கினார்கள். அதெல்லாம் சொல்லி மாளாது. சொல்லவே முடியாது. நமக்காகக் காலம் முழுவதும் உழைத்தார்கள். அந்தக் காலத்தில் வரும்போது ஒவ்வொரு வீட்டுக்கும் வருவார்கள். ஏழை வீடு, எளிய வீடு... ஒவ்வொரு வீட்டுக்கும் வருவார்கள். அத்தகைய கருணை நாதர் அவர்கள். அவர்களிடம் ஏராளமான ஹக்குடைய செல்வம் இருந்தது. அதை எல்லாருக்கும் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அவர்கள், ஆரம்பத்தில் பேரின்பப் பாதையிலேயே குறிப்பிட்டார்கள் : நாங்கள் நிறைய அறபி நூல்களை வெளியிட வேண்டும். ஞானத்தை உயிர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். மேலும், மடிந்து மக்கி மண்ணாகிப்போன இதயங்களை உயிர்ப்பிக்கவே நாம் பிறந்தோம் என்றருளினார்கள். அது யாரால் முடியும்? அத்தகைய சிறப்பிற்குரிய வாப்பா நாயகமவர்களை ஹக்கு நமக்குக் கொடுத்தது, நம்மீது கொண்ட கருணைதான். அல்லாஹ்வுடைய ரஹ்மத் தான். அல்லாஹ்வுடைய ரஹ்மத் நபிமார்களுடைய வழியாக வந்தது. பின்னர் அஹ்ல பைத்துகள் வழியாக வந்து கொண்டே இருக்கின்றது. வலிமார்கள் வழியாக வருகின்றது.

மனிதனுக்கு உணவு தேவை என்பதை எப்படி அல்லாஹ், 2000 வருடத்திற்கு முன்னரே ரிஜ்க்கை படைத்துவிட்டான் என்று சொல்லப்படுவதைப்போன்று, அதேமாதிரி இந்தக் கருணையும் ஆதியிலேயே திட்டமிடப்பட்டு விட்டது. எந்தப் பகுதியில் வலிமார்கள் வருகிறார்களோ, அவர்களைக் கொண்டு அந்தப் பகுதி மக்கள் பாக்கியசாலிகள். அந்த வகையில் பார்த்தால், தமிழகத்தின் தலைநகராக திருச்சிதான் திகழ்கின்றது. தப்லே ஆலம் பாதுஷா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிறகு, நமது வாப்பா நாயகமவர்கள் திருச்சி வந்துவிட்டார்கள். அநேகமாக, இன்ஷா அல்லாஹ் திருச்சி நமது காலத்திலேயே திருச்சி தலைநகரமாகிவிடும். ஆன்மிகத் தலைநகரமாகவும் விளங்கப் போகின்றது. நம் பக்கத்திலேயே வந்துவிட்டார்கள். நினைத்தால் போதும், ஐந்து மணிநேரப் பிரயாணமோ, அரைமணிநேரப் பிரயாணமோ உடனே வந்து, வாப்பா நாயகமவர்களைச் சந்திக்க வரலாம். நம் அனைவர் மீதும் கருணை கொண்டு, இங்கே வந்து நமக்கு அடக்கம் தந்திருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கும், அவர்கள் தமது திருக்குடும்பத்தாருக்கும் நாம் காலமெல்லாம் நன்றிக்கடன் பட்டவர்கள்......... என்று கூறிக்கொண்டு, நேரம் மிகக் குறைவாக இருப்பதனால், தங்கள் அனுமதியோடு, ஒரு பாடலை மட்டும் பாடி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை நினைத்தாலே எல்லாருக்கும் கண்ணீர்தான் பெருகுகின்றது. அதுபொருட்டே முடிந்தவரை நான் பாடுகின்றேன்... (என்று கண்ணீர் முட்ட, உதடு துடிக்க....) அழுவோமா தோழர்களே! அவ்ன் நாதர் பிரிவாலே! கண்ணீர் கங்கை ஓடும் கவலை என்று மாறும்? உள்ளம் கொண்ட அன்பாலே உயிரில் தோய்ந்த உறவாலே!.....

...... பாடல் வரிகளைப் பாடி முடிக்கையில், அவையில் கூடியிருந்த அனைவரது இதயமும் கண்மணி வாப்பா நாயமவர்களை தேடி அலைந்தது. கண்கள் பனித்தது. நினைவலைகளில் நிலைத்தது. நிகழ்காலம் தொலைத்தது. கலீபா. ஆலிம் புலவர் அவர்களின் கவலை தோய்ந்த தேடல்... அனைவரையும் அழவைத்தது நிதர்சனம். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், பாடல் கேட்டு வருவார்கள்.... திருப்பாதம் நெஞ்சில் தருவார்கள் (ஆமீன்).

(தொடர்ந்து பேசுவார்கள்)

**நெகிழ்ச்சித் தொகுப்பு :**

**இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி,**

**M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

# ஏன் வருமாம் பார்ப் போர்?

இன்றி யமையா இறையருள்சித் தம்தண்ணீர்
அகர முதல இருப்பதெல்லாம் ஆதிமுதலே தண்ணீர்
மன்னும் மண்ணும் பிறந்தமூலம் தண்ணீர்
மண்முன் நுரையும் நுரைமுன்என தண்ணீர்
இன்னும் பெய்தே இவ்வுலகம் காக்கும்நீர்
உண்ணப் பசிதாகம் பருகிடப் போக்கும்நீர்
அன்னும் உழவுக்கும் தொழிலுக்கும் அமிழ்நீர்
அன்பைப் பொய்க்காமல் பெய்தருளும் தமிழ்நீர்

விந்து மிதக்கவும் பிண்டம் வளரவும்நீர்
விந்தைத் தாய்ப்பால் சுரக்கவுமிதழ் பருகவும்நீர்
எந்நா வரண்டால் தன்னால் சுரந்திடும் உமிழ்நீர்
எல்லா உயிர்க்கும் மூலமானதாம் அமிழ்நீர்
எந்நா டுயர்ந்திட ஆதாரமா னவளநீர்
எங்குத் தோண்டினும் கரம்நீட்டிய ஈரநிலநீர்
எந்தப் பொருளுக்கும் அதுவந்தவழி மறைநீர்
இப்படியொரு படைப்பில்லை என்பேன் இறைநீர்

மலையிற் பிறந்தநீர் மண்ணில்நதி பயின்றநீர்
மருகிக் குளமாகி மக்கட் குலமீன்ற நீர்
வலையிற் சிக்காமல் பள்ளம்தேடிப் பாயும்நீர்
தலையில் மிதக்கும் மூளைக்கும் மூலநீர்
அலைகடல் அரவணைத்து வானேறும் மழைநீர்
அழகான சுழற்சியிலே பூமிவரையும் கலைநீர்
மலருக்கு மணமுடித்தால் மகரந்தமாய்த் தேன்நீர்
மனதுக்குக் கவலையெனில் உரமேற்றும் தேநீர்

கழுவுதற்கும் அழுவுதற்கும் கட்டாயக் கழிநீர்
கனநீர் உருவெடுத்தால் கட்டில்லா உழிநீர்
தழுவுதற்குப் பூமியிங்கே தவம்கிடக்கும் வரநீர்
தாகித்து நோன்பிருக்கும் பயிர்களுக்கு உரநீர்
விழுந்தோடி வழிந்தோடி உயிர்காக்கும் அறநீர்
விண்ணுக்கும் மண்ணுக்கும் சுற்றிவரும் சுரநீர்
தொழுதோடித் தொண்டாற்றி அணைத்திட வேண்டுநீர்
தொலைத்து விட்டுப் பூசியம்வரை தோண்டுநீர்

**உலக தண்ணீர் தினத்தை (மார்ச் 22) முன்னிட்டு எழுதப்பட்ட கவிதை!**

**இளங்கவி. அ. நைனார் முஹம்மது அன்சாரி, M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

கன்றுகன்றாய் நட்டதெல்லாம் கானலாய்ப் போனநீர்
காடாகிப் போயிருந்தால் நாடெங்கும் வானநீர்
இன்று மட்டும் பேசிவிட்டு இத்யாதி செய்துவிட்டுநீர்
இல்ல தெல்லாம் அத்யாயமாக்கி விட்டால்நீர்
நன்றுதேடி நாளெல்லாம் அலைந்தாலும் அந்நீர்
நமக்கெல்லாம் கிட்டாது வறண்டுவிடும் செந்நீர்
ஒன்று சொல்வேன் அவசியத்தைப் பார்ப்போர்
ஒழுக்கமுடன் சேமித்தால் ஏன்வருமாம் பார்ப் போர்?

---

- சன்மார்க்கத்தில் என்னை நேர்நடத்தியவர்களே, எனது ஆசான்களே! உங்களுக்கு முன்னால் என் ஜீவனை அர்ப்பணஞ் செய்கிறேன். என்னை நேர் நடத்தும் நீங்களின்றி எனக்கு வாழ்க்கை இல்லை. ஹக்கின் பிரதரிசனமுள்ளவர் களில் என்னைச் சேருங்கள்.

- இரண்டற்ற சேர்மானத்தைப் பற்றிக் கொள்ளும்படி தாங்கள் சொன்ன பொழுது சேர்மான அடையாளத்திலேயுள்ள உண்மை எனக்குச் சரியாகியது. பிரிவைக் கலைந்து விட எனக்கு உதவி செய்யுங்கள். நீங்களின்றி நமக்குக் காரியக்காரர் எவர்?

- தங்கள் கயிற்றைப் பற்றிப் பிடித்தவர்களிலே இந்த உங்கள் சிற்றடிமை யையும் எண்ணிக் கொள்ளுங்கள். இவனின் குறையைத் தள்ளி விடுங்கள். ஹக்கின் பிரதரிசனம் அதிகமான கூட்டமே.

- தங்களின் உகப்பு எனது நரம்புகளிடையே ஓடுகின்றது. அதனால் ஹக்களவில் உயர்கிறவரைப் பாதிக்கும் பிரிவு நீங்கியது. எது சத்திய அனுபவத்தைக் குறைக்கிறவர்கள் யாவரும் பலவீனப்பட மாட்டார்கள். என்னை வழி கெடுக்கிறவர்களின் பர்வதம் பறந்தது.

- என்னின்றும் ஓடியவனின் (ஷைத்தானின்) இரகசியம் எனக்குச் சந்தோஷத்தை வருத்தியது. ஓர் அடிமையைப் போல் என்னிலிருந்து குப்புற விழுந்தவனுக்கு என்னதான் சொல்வேன். முன்னால் எப்பொழுதும் என்னை மெலிய வைத்துக் கொண்டிருந்தான். நாயகமார்களே! எனக்குத் தாழ்மையைத் தூண்டிக் கொண்டிருந்த ஷைத்தான் விரண்டோடினான்.

- மேன்மை அடங்கலுக்கும் நேரம் வந்துவிட்டது. நாம் வெளியாக முன்பே இந்த வாக்கும் ஆகிவிட்டது. அல்லாஹ்வின் கற்பனை (மரணம்) கற்பிக்கப்படுகிறதற்கு முன்னால் அவனைப் பற்றிப் பிடித்து நேர்வழியில் இட்டுச் செல்லுங்கள்.

**“கலிமா விருட்சக் கனிந்த கனி ” நூலில்**

**குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள்.**



# மதுரஸா நன்கொடை



**திருச்சி**

ஜனாப். என். ராஜா முஹம்மது அவர்கள் நன்கெடை ரூ.25000/-ம்,

ஹெச். அபிபுல்லா தன் சகோதரி மர்ஹூமா நூர்ஜான் 3 ஆம் நாளை முன்னிட்டு ரூ. 5000/-ம்,

கே. முஹம்மது முஸ்தபா (உடுமலை) மர்ஹூமா நூர்ஜான் அவர்களின் 7 ஆம் நாள் பாத்திஹா விற்காக ரூ. 5000/-ம்,

ஃபாத்திமா பர்ஸானா (உடுமலை) தமது உடல்நலத்திற்கு துஆசெய்ய ரூ. 5000/-ம்,

ஜமைக்காவிலிருந்து ஸன்னி சகோதரி .இஃப்தார் மற்றும் இரவு உணவுக்கு ரூ. 10000/-ம்,

ஹெச். அபிபுல்லா தன் சகோதரி மர்ஹூமா நூர்ஜான் வருட பாத்திஹாவிற்காக ரூ. 10000/-ம்,

பாத்திமா பர்ஸானா (உடுமலை) விபத்துக்குள்ளான கணவரின் உடல் நலத்துக்கு துஆசெய்ய ரூ. 5000/-ம்,

ஜஹிரா பானு (கோவை) நாட்டங்கள் நிறைவேற துஆசெய்ய ரூ. 1000/-ம்,

முஹம்மது அஷ்ரப்அலி (இராமநாத புரம்) பூரண உடல் நலம் பெற துஆசெய்ய ரூ.2000/-ம்,

ஜனாப். இஞ். ஜகரிய்யா திருச்சி.(கேம்ப், பிரான்ஸ்) மாணவர்களின் இரண்டுநாள் இரவு உணவுக்கு ரூ. 10000/-ம்,

நஜீமா அபிபுல்லா நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு ரூ. 5000/

என். ராஜா முஹம்மது விபத்துக்குள்ளான மகன் பூரண நலம் பெற துஆசெய்ய ரூ. 10000/-ம்,

என். ராஜா முஹம்மது தாயார் வஃபாத்தானதை முன்னிட்டு குர்ஆன் ஓதி துஆ செய்ய ரூ. 2000/-ம்,

**மதுக்கூர்**

வஹீதா பீவி பூரண உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.3000/-ம்,

ஏ.எம். ஜாஹிர் உசேன் கண்கள் சுகமாக நன்கொடை ரூ.600/-ம்,

என்.பர்ஹான் நஜ்முதீன் பூரண உடல் நலத்துக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

எல். இஸ்ஹாம் வீடு வாங்க துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

எம். அஹ்மது கபீர் உண்டியல் (எண் 61) சேமித்து நல்வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.3800/-ம்,

அப்துல் நாசர் தாஹிர் நாச்சியா உண்டியல் சேமிப்பு (எண் 41) நல்வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.8055/-ம்,

ஏ. காதர் மைதீன் பூரண உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.3000/-ம்,

ஏ.பரீதா பீவி தன்னுடைய மூத்த மகனுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தற்கு நன்கொடை ரூ.2000/-ம்,

கே.ஆர்.கே. சாஜிதா தமது கணவர் ஹாஜா மைதீன் பூரண உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.1000/-ம்,

ஜே. நூருல் பகுருதீன் நாட்டங் களும் தேட்டங்களும் நிறைவேறி யதை முன்னிட்டு நன்கொடை ரூ.2500/-ம்,

எம். அப்துல் கரீம் உண்டியல் சேமிப்பு (எண்.53) பூரண உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.9200/-ம்,

இ.சுபைர் அலி உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

ஏ.காதர் மைதீன் மர்ஹூமா அபூபக்கர் சரீபு உம்மானி அம்மாள் ஆகியோருக்கு யாஸீன் ஓதி துஆ செய்ய நன்கொடை ரூ.1000/-ம்,

ஓ.பி.யூ.ஏ. பசீர் அகமது பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.1500/-ம்,

ஓ.பி.யூ. ஹாஜா மூலம் தோல் வசூல் உடல் நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.700/-ம்,

கே. செய்யது அகமது மகன் எஸ். ஃபாலில் அஹமது பிறந்த நாளை முன்னிட்டு (24.3.24) நல்வாழ்வுக்கும் நீண்ட ஆயுளுக்கும் துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

ஏ.எம்.ஒய். கையூம் பிள்ளைகள் நலம் பெற துஆ செய்ய நன்கொடை ரூ.1000/-ம்,

**திண்டுக்கல்**

மதுரை கே.புதூர். எஸ்.ஷாஹூல் ஹமீது துஆ செய்ய மாதந்த சதக்கா ரூ. 1000/-ம்,

சென்னை எஸ். சர்மிளா உசேன் உண்டியல் காணிக்கை துஆ செய்ய ரூ.1000/-ம்,

மேலத் திருப்பூந்துருத்தி ஹெச். ஹாஜா முஹைதீன் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ.500/-ம்,

மேலத் திருப்பூந்துருத்தி கே. மஹ்தியா பேகம் குடும்ப நலத்திற்கு துஆ செய்ய ரூ.500/-ம்,

காரைக்குடி அஜ்மல்கான் ஷைகு நாயகம் அவர்கள் பெயரில் நிய்யத் செய்து துஆ செய்ய உணவுக்கு ரூ.1000/-ம்,

மேலத் திருப்பூந்துருத்தி ஹெச். ஹாஜா முஹைதீன் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ.500/-ம்,

ஹோஸ்பேட் ஏ.கே. முஹம்மது மீரா சாஹிப் துஆ செய்ய நன்கொடை ரூ.500/-ம்,

காரைக்கால் ஆர்.எ. அப்துல் பாரூக் பாத்திமா அவர்கள் கடன்கள் நீங்கி குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ மாதாந்த நன்கொடை துஆ செய்ய ரூ.500/-ம்,

காந்தி கிராமம் பத்தூல் குடும்பம் சதக்கா ரூ.500/-ம்,

திண்டுக்கல் ரஜியா பேகம் (எஸ்.பி. ஆரிப் துணைவியார்) மர்ஹூம் கலீபா ஏ.பி. ஷாஹுல் ஹமீது, டாக்டர். எஸ்.பதுருதீன், டாக்டர். அப்துல் ஹக், டாக்டர். காசிம் ரஜ்வி, எஸ்.பி, ஆரிப் ஆகியோரின் நினைவாக துஆ செய்ய ரூ.5000/-ம்,

பேராவூரணி.ரோஜா பானு நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ.1500/-ம்,

புதுக்கோட்டை ஜே. முஹம்மது இப்றாஹீம் (என். ஜமால் முஹம்மது மகனார்) துஆ செய்ய ரூ.1000/-ம்,

மடத்துக்குளம் எஸ்.பி. சேக் அப்துல்லா – சாலிஹா பீவி துஆ செய்ய மாதாந்த நன்கொடை ரூ.700/-ம்,

காந்திகிராமம் எம். முஹம்மது அப்துல்லாஹ் நிய்யத் செய்து துஆ செய்ய ரூ.500/-ம்,

ஈரோடு எம். ஜரீனா பேகம் அவர்கள் நாட்டங்கள் நிறைவேற பதுரு மௌலிது ஓதி துஆ செய்ய ரூ.2500/-ம்,

திண்டுக்கல் ஏ.ஜைனப் ஜுனைதா பரிபூரண சுகத்துடன் நீண்ட ஆயுள் பெற்று நலமாக வாழ துஆ செய்ய ரூ.1001/-ம்,

திண்டுக்கல் ராபியத்துல் பஸரிய்யா தமது மகளுக்கு ஸாலிஹான மணமகன் அமைந்து விரைவில் திருமணம் நடைபெற நிய்யத் செய்து துஆ செய்ய ரூ.500/-ம்,

திண்டுக்கல் ஹாஜியா . ஜே. ராபியா மௌலவி. ஹாஜி. கே.எஸ். ஜமால் மைதீன் பாக்கவி (துணைவியார்) ஆண்டு 1க்கு மதுரஸா மாணவர் ஒருவரின் செலவுக்கு ரூ. 36000/-ம், திண்டுக்கல்லில் நடைபெற்ற பதுரு ஸஹாபாக்கள் விழாவிற்கு ஆடு 1 க்கு ரூ. 10500/-ம்,

திண்டுக்கல் ஆர். நாதிர் (எஸ்.பி. ராஜா முஹம்மது மகன்) 10 ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற துஆ செய்ய ரூ.1001/-ம்,

மன்னார்குடி மர்ஹூமா சல்மா பீவி அவர்களின் மறுமை நல்வாழ்வுக்கு குர்ஆன் ஷரீப் ஓதி துஆ செய்ய ரூ.3200/-ம்,

மன்னார்குடி குழந்தை முஹம்மது ஆபித் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ.1000/-ம்,

காந்தி கிராமம் மர்ஹூமா ஆபிதா - மர்ஹூம் அப்துல் ஹமீது இருவருக்கும் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ.500/-ம்,

படமாத்தூர் எஸ். ஆமினா பீவி - முஹம்மது நாஸிருக்கு நல்ல வேலை கிடைக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ.2000/-ம்,

கலியநல்லூர் இ. எம். மொஹிதீன் பாத்திமா கணவர் மர்ஹூம் இப்றாஹீம் மூஸா அவர்கள் மறுமை நல்வாழ் விற்கு துஆ செய்ய ரூ.1000/-ம்,

திண்டுக்கல் ஹஸனாத்புரம் ஜரீனா பானு குடும்பத்தினர் துஆ செய்ய ரூ.1000/-ம்,

பாக்கம் கோட்டூர் எம். அப்துல்ஹமீது அவர்கள் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ.1000/-ம்,

மதுரை மர்ஹூமா ஆயிஷா அவர்களின் வருட பாத்திஹவுக்காக யாஸீன் ஓதி துஆ செய்ய ரூ. 500/-ம்,

சிவகங்கை கே. அப்துர்ரஜாக் மற்றும் குடும்பத்தார் இறைவன் அருளால் பரிபூரண சுகத்துடன் பாதுகாப்பாக வாழ துஆ செய்ய ஸஹர் - இஃப்தார் உணவுக்கு ரூ.10000/-ம்,

திண்டுக்கல் அவுதார் செராமிக்ஸ் திருமதி செல்வி அவர்கள் தொழில் அபிவிருத்திக்கு பிரார்த்தனை செய்ய ஸஹர் - இஃப்தார் உணவுக்கு ரூ.10000/-ம்,

அய்யம்பேட்டை குண்டு ஜே. ஜெய்னுல் ஆபிதீன் ஷைகு நாயகம் அவர்கள் தர்ஹா ஷரீஃபுக்கு வாழ்நாள் முழுதும் மாதந்தோறும் ரூபாய் 1000/- வழங்க நிய்யத் செய்து ரூ. 1000/-ம்,

திருச்சி ரஹ்மத் காதர்மைதீன் உடல் நிலை சரியாக நிய்யத் செய்து சதக்கா ஆடு 1க்கு ரூபாயும், உடல் நலம் பரிபூரணசுகம் வேண்டி பதுரு சஹாபாக்கள் நினைவுதின திண்டுக்கல் விழாவுக்கு ஆடு 1க்கு ரூ 10500/-ம்,

திண்டுக்கல்ஹாஜி. ஜே. முஹம்மது ரஹ்மத்துல்லா, மற்றும் ஜே. முஹம்மது சதக்கத்துல்லா ஆகியோரின் மச்சான் மர்ஹூம் கே.எம்.இ. அப்துல்லா (25.4.2024) வஃபாத்தான ஆறாம் நாள் பாத்திஹாவை முன்னிட்டு கத்தம் ஓதி துஆ செய்ய காலை உணவுக்காக அவரது பேரன் ஜியாவுல் ஹக் ரூ.5000/ மும், இருபது கிலோ கோதுமையும் வழங்கினார்.

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்ட தேட்டங்களை நிறைவேற்றியருள்வானாக! ஆமீன்!**

بسم الله الرحمن الرحيم

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

சங்கைக்குரிய குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது

# யாஸீன் மௌலானா (ரலி)

அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின்

# 60 ஆம் வருட கந்தூரி விழா அழைப்பிதழ் !

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

பரிசுத்த ஹக்கின் அவதார சந்நிதானமும், ஈருலக ரட்சகர் முஹம்மது முஸ்தஃபா ரசூலே கறீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ரங்க வெளிரங்க வாரிசும் கௌதுல் அஉளம் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் சம்பூரணப் பிரதிநிதியும் காலத்தின் இமாமும் ஆத்ம ஞான குருநாதருமான குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் 60ஆம் வருடக் கந்தூரி விழா ஹிஜ்ரி 1445 துல்கஃதா பிறை 7 (15.05.2024) புதன்கிழமை மாலை வியாழக்கிழமை இரவு திருமுல்லைவாசல் மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் தர்ஹா ஷரீஃபில் இன்ஷா அல்லாஹ் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, துல்கஃதா பிறை 17 (25.05.2024) சனிக்கிழமை மாலை ஞாயிற்றுக்கிழமை இரவு கந்தூரி விழா புனித ராத்திபு மஜ்லிஸ் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நிறைவு பெறவிருப்பதால் முரீதுகள், பக்தர்கள் அனைவரும் தவறாமல் புனிதக் கந்தூரி வைபவத்தில் கலந்து கொண்டு, மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் அருளையும், ஆசியையும் பெற்று ஈருலக நற்பேறுகளையும் அடைந்து கொள்ளக் கோருகிறோம். வஸ்ஸலாம்.

**வாரிசுகள், கலீஃபாக்கள், முரீதுகள் சார்பாக**

கலீஃபா. ஆலிம் புலவர் **S.ஹுசைன் முஹம்மது**

ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee